ரூபா: 6.00
பக்கங்கள்:-பன்னிரெண்டு
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

...04 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 17 புதன்கிழமை (01.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 14

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

(அமைச்சர் மிலிந்த தலைமையில் மாநாடு)

# ...அதி உயர் பாதுகாப்பு வலயங்களை ...உயர் மட்டக் குழு பார்வையிட்டது!

## படைத் தளபதிகளுடன் ஆராய்வு; ஆயருடன் சந்திப்பு

(நமது நிருபர்)

**யாழ்.குடா நாட்டின் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்வதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் யாழ்ப்பாணம் வந்த உயர் மட்ட குழுவினர் பலாலி இராணுவத் தளம்,512வது படையணித் தலைமையகம்,51வது படையணித் தலைமையகம் ஆகிய வற்றில் மாநாடுகள் நடத்தி உயர் பாதுகாப்பு வலய வரையறை குறித்து ஆராய்ந்துள்ளனர்.**

யாழ்.குடா நாட்டின் அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்கள்ளை மீளக்குடியமர்த்துவதற்கு இராணுவம் விதித்துள்ள நிபந்தனை களை அடுத்து விடுதலைப் புலிக ளுக்கும, இராணுவத்தினருக்குமி டையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக களைந்து அடுத்த சுற்றில் தாய்லாந துப் பேச்சுவார்த்தையை சுமுகமாக நடததுவதற்கு முன்னேற்பாடாக நேற்று இந்த உயர் மட்ட மாநாடு கூட்டப்ப ட்டது.

இம்மாநாட்டில் இராணுவத் தள பதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, விமானப் படைத் தளபதி எயர் மாாஷல் டொனால்ட்பெரேரா, யாழ்.குடாநாட்டு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா மற்றும் உயர் மட்ட படை அதிகாரி களுடன், பாதுகாப்பு அமைச்சின் செய லாளர் ஒஸ்ரின் பொ்னாண்டோ, யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர்

(02 பக்கம் பார்க்க)



### புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

எமது அன்புக்குரிய வாசகர்கள், விளம்பரதாரர்கள், வர்த்தகப் பெரு மக்கள், ஆதரவாளர்கள் அனைவ ருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த் துக்களைத் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

-வலம்புரிக் குடும்பம்-

## ...வுனியா திருடர் இருவர் ...காடிகாமத்தில் சிக்கினர்

### ...பருமளவு நகைகள் யாழில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

...வுனியாவிலுள்ள நகைக் கடை ...திருடிய பெருமளவான நகை ...யாழ்ப்பாணத்திலுள்ள நகைக ...ளுக்கு விற்பனை செய்து கொண ...வவுனிய வாசிகள் இருவர் பொலி ... வசமாக மாட்டிக் கொண் டனர்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பா ணம் வருகை தந்த இளைஞர் குழு வினர் கொடிகாமம் பொலிசாரின் உத வியுடன் கொடிகாமத்தில் வைத்து திருடர்கள் இருவரையும் மடக்கிப்

(12ம் பக்கம் பார்க்க)

### வெடிச்சத்துங்களுடன் புத்தாண்டு பிறந்தது

(யாழ்ப்பாணம்)

சமாதான சூழலில்,பட்டாஸ் வெடிச் சத்தங்களுடனும், துப்பாக்கிவேட்டு ஆரவாரங்களுடனும் நேற்று நள்ளி ரவு 12மணிக்கு 2003ம் ஆண்டை மக கள் குதுகலமாக கொண்டாடி வர வேற்றார்கள். (வ)

## கடலோரக் காற்று நேற்று வெளியீடு

(யாழப்பாணம)

கடற்புலிகளின் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு வெளியீடாக நிதர்சனம் நிறுவனத்தால் தயாரிக்க ப்பட்ட ந.கேசவராஜனின் ''கடலோரக் காற்று'' முழு நீளத்திரைப்பட் வெளி யீட்டு நிகழ்வு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுப பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

நிகழவில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

(02ம் பக்கம் பார்க்க)

## ...காணைச் செயலகம் முன் ...தொடர்ந்து மறியற் போர்

(மானிப்பாய்)

...ன்னாலைப் பகுதியிலிருந்து இடம் ...ந்த மக்கள்தம்மை அப்பகுதி ...ளக் குடியமர்த்துமாறு கோரி ... இரண்டாவது நாளாகவும் சங ... பிரதேச செயலகம் முன்பாக ... தாக பொன்னாலை மக்கள் ஒன்றி யத் தலைவர் பொன்ராசா தெரிவித்தார்.

இதேவேளை உயர் பாதுகாப்பு வலய விவகாரம் குறித்து ஆராய்வ தற்காக நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, மறி...

## உயர் பாதுகாப்பு வலயம் பற்றி ஆராயவே யாழ்.வந்தோம்!

### அமைச்சர் மிலிந்த மொறகொடதெரிவிப்பு

(அலுவலக நிருபர்)

இம் மாதம் 6ம் திகதி தாய்லாந் தில் நடைபெறவுள்ள நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது முக்கிய...

உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்றம் தொடர்பாக ஆராய்வ...

களை மீளக் குடியமர்த்துவது தொடர் பாக யாழ்.குடர் இராணுவத் தளபதி நிபந்தனை விதித்து புலிகளிடம் கைய...

ந்த மக்களைத்தம்மை அப்பகுதி
ளைக் குடியமர்த்துமாறு கோரி
இரண்டாவது நாளாகவும் சங
பிரதேச செயலகம் முன்பாக
போராட்டத்தில் ஈடுபட்டனர்.
மறியற் போராட்டத்தில நூற்
க்கான பொது மக்கள் கலந்து
டனர். மீள் குடியமர்வு தொடர்
ாதகமான பதில் கிடைக்கும்
தொடர்ந்து போராடப் போவ

வலய விவகாரம் குறித்து ஆராய்வ தற்காக நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, மறியற் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு தாம் வருகை தருவதாக அறிவித்திருந்ததாகவும் இறுதியில் அங்கு வராமலேயே கொழும்பு சென்றுவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(த.232)

## புலிகளின் வானொலிக் கருவி

# பிரதமரிடம் விளக்கம் கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

ழீழ விடுதலைப் புலிகளுக்கு
ாலக் கருவிகள் வழங்கியமை
பாக உடனடியாக விளக்கம்
குமாறு பிரதமர் ரணில் 'விக்
ங்காவை ஜனாதிபதி கடிதம்
கோரியுள்ளார்.
ழீழ விடுதலைப் புலிகளுக்கு
வேத் தூதுவர் ஜோன் வெஸ்

போர்க் மூலம் வானொலிக் கருவிகள் வழங்கியமை சம்பந்தமாக நோர்வேத் தூதுவரை உடனடியாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருக்கும் இவ்வேளையில் ஜனாதிபதி சந்திரிகா பிரதமரிடம் விளக்கம் கோரியிருப்பது அரசியலில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

(12ம் பக்கம் பார்க்க)

(அலுவலக நிருபர்)

இம் மாதம் 6ம் திகதி தாய்லாந்தில் நடைபெறவுள்ள நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது முக்கிய விடயமாக இடம் பெறவுள்ள அதி

## வெஞ்சமரின்வரிகள் கலைஞர்களுக்கு பிரபா பாராட்டு

(கிளிநொச்சி)

"வெஞ்சமரின்வரிகள் ஒளிப்பேழை" கலைஞர்களை விடுதலைப் புலிகளின தலைவர் வே.பிரபாகரன் நேரில் பாராட்டிக் கௌரவித்துள்ளார்.

தலைவர் வே.பிரபாகரன் வன்னியில் நேற்று முன்தினம் மாலதி படையணிப் போராளிகளின் ஒன்று கூடல் நிகழ்வில் கலந்து கொண்டபோதே வெஞ்சமரின்வரிகள் ஒளிப் பேழைக் கலைஞர்களைக் கௌரவித்து தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வில் ஒளிப்பேழை வெளியிடப்பட்டது. இந்நிகழ்வின்போது கலைஞர்களின கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ம)

## அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவிப்பு

உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்றம் தொடர்பாக ஆராய்வதற்காகவே நேற்றைய தினம் தான் யாழ்ப்பாணம் வந்ததாக அமைச்சர் மிலிந்த மொறக்கொட தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக யாழ்.குடா இராணுவத் தளபதி நிபந்தனை விதித்து புலிகளிடம் கையளித்த அறிக்கை தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தரபபினருக்குமிடையில் ஏற்பட்ட முரண்

(02ம்பக்கம் பார்க்க)

# நோர்வேத் தூதுவரால் இலங்கைக்கு அபகீர்த்தி

## ஜனாதிபதி நோர்வேப் பிரதமருக்குக் கடிதம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு நவீன வானொலி உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்போர்க் நடந்து கொண்ட முறை இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதென சுட்டிக் காட்டி நோர்வேப் பிரதமருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

டிசம்பர் மாதம் 30ம் திகதி இடப்பட்ட இக் கடிதம் நேற்று நோர்வேப் பிரதமருக்கு ஜனாதிபதியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நோர்வேப்பிரதமருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அனுப்பிவைத்துள்ள

(02ம் பக்கம் பார்க்க)




எல்லோருக்கும் எம் இதயம் நிறைந்த
HERO HONDA
புதுவருட நல் வாழ்த்துக்கள்
இரத்தின கோபாலிஸ்
HERO HONDA World No. 1 Two-Wheeler Company
யாழ்.நகரில் HERO HONDA கம்பனியால் அங்கீகரிக்கப்பட்ட 3S முகவர் (விற்பனை-விற்பனைக்குப் பிந்திய சேவை-உதிரிப்பாகம்)
63,65,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

# மீளக்குடியமர்ந்த கிராமங்களில்

# அடுத்த ஆண்டு அபிவிருத்திப் பணிகள்

(காரைநகர்)

யாழ் மாவட்டத்தில் ஏ-9 வீதியூடாக அதிகளவாக மக்கள் மீளக்குடியமர்ந்த 5 பிரதேச செயலர் பிரிவுகளில் யு.என்.எச்.சி.ஆர். மற்றும் போறூட் நிறுவனம் ஆகியன இணைந்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளன.

2003ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தில் அதிகளவாக மீளக்குடியமர்ந்த வறிய கிராமங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் பிட்டியெல்லை, பருத்தியடைப்பு வேலணை பிரதேச செயலர் பிரிவில் மண்டை தீவு, செட்டிபுலம் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சுப்பர் மடம் ஆதிகோவிலடி, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கரவெட்டி கிழக்கு, மாதோணி, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் அழியாவளை, உடுத்துறை ஆகிய கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அபிவிருத்திக்கான தரவுகள் ஏற்கனவே அந்தந்த பிரிவு கிராம சேவையாளரிடமிருந்து பிரதேசசெயலகங்களினூடாக பெறப்பட்டுள்ளன. (உ-246)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நாவலர் கலாசார மணி மண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இம் முறை செல்வி தாட்சாயணி ஸ்ரீ பாலசந்திரனின் சிறப்புச் சொற்பொழிவும் 'நானே இதற்கு நாயகம்' எனும் விடயத்தில் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (உ)

## ஐயப்பபக்தர்கள் 5 ஆம் திகதி அதிகாலை புறப்படுவர்

### அமைச்சர்கள் வழியனுப்புவர்

(கொழும்பு)

எதிர் வரும் 5ம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு ஸ்ரீலங்கா எயார் லையின் விசேட விமானம் மூலம் ஐயப்ப யாத்திரிகர்கள் முதல் தொகுதியினர் சபரிமலை புறப்பட இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

விசேட விமான மூலம் செல்லவுள்ள அடியார்களை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரனும் மற்றும் ஏனைய அமைச்சர்களும் அதிகாரிகளும் வழியனுப்பி வைப்பார்கள்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து திருவனந்தபுரம் சென்று அங்கிருந்து தரை மார்க்கமாக சபரிமலை ஐயப்ப யாத்திரையைத் இவர்கள் தொடர்வர். இப் பக்தர்களின் நன்மை கருதி இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் விஷேட விசா கருமபீடம் இந்தியத் தூதரகத்தில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. விஷேட அடையாள அட்டை, மற்றும் நோய்த்தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. (பி)

## பன்னிரு வருடங்களின் பின் சின்னமடு பாடசாலை இன்று முதல் இயங்கும்

(ஊர்காவற்றுறை)

யா/ சின்னமடு றோமன் கத்தோலிக்க அ.த.க. பாடசாலை இன்று முதல் இயங்கவுள்ளது.

இன்றைய சம்பிரதாய பூர்வமான ஆரம்ப நிகழ்வு மேற்படி பாடசாலையின் அதிபர் க. சண்முகம்பிள்ளை தலைமையில் மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜெ. எக்ஸ். செல்வநாயகமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, கடந்த 12 வருடங்களின் பின்னர் இப் பாடசாலை இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## பிரிட்டன் யுத்தக் கப்பல் இலங்கைக்குள் நுழைந்தது

(கொழும்பு)

பிரிட்டனின் யுத்தக் கப்பல் இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசித்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவும், பிரித்தானியாவும் பிரகடனப் படுத்தியுள்ள யுத்தத்திற்கு இலங்கை ஊடாக யுத்த விமானங்கள், யுத்தக் கப்பல்கள் என்பவற்றை பயன்படுத்துவதற்கு அனுமதி கோரியிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் தரித்து நிற்கும் இக் கப்பலின் கப்டன் மேற்குப் பிராந்திய கடற்படைத்தளபதி றியல் அட்னா ரத்னகீர்தனவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## அதிஉயர் பாதுகாப்பு

கலந்து கொண்டனர்.

இந்த உயர்மட்டக்குழுவினர் மாநாட்டிற்கு முன்பதாக யாழ்குடாநாட்டில் உள்ள அதிஉயர் பாதுகாப்புவலயபிரதேசங்களுக்கு அரசஅதிகாரிகள் சகிதம் நேரில்சென்று பார்வையிட்டனர். இதன்பின்னர் யாழ் ஆயர்இல்லத்தில் யாழ்ஆயருடன் கலந்துரையாடினர். இதில் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் கலந்துகொண்டார்.

யாழ்நகரில்உள்ள 512வது படையணி, 51வதுபடையணி ஆகியவற்றின் தலைமையகத்திலும் இக்குழுவினர் கூடி ஞானம்ஸ்ஹோட்டல், சுபாஸ் விடுதி ஆகியவற்றில்இருந்து இராணுவத்தினர் வெளியேறி யாழ் நூல்நிலையப்பகுதியில் முகாம்அமைப்பது தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளனர்.

அமைச்சர் மிலிந்தமொறகொட தலைமையிலான இந்த உயர்மட்டக்குழுவினரால் உயர்பாதுகாப்புவலய பிரதேசங்களின் வரையறை தொடர்பாக ஆராயப்பட்ட போது படையினருக்குரிய அச்சுறுத்தல்கள் குறித்து படை அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

இந்த உயர்மட்டக்குழுவினர் தமது நேரடிவிஜயத்தின் போது கண்டறிந்த விடயங்களை உள்ளடக்கியதான அறிக்கைஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் சமர்ப்பிக்கவுள்ளனர் என்றும் அந்தஅறிக்கையை அடிக்கல்லாகவைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுஇடம்பெற்ற உயர்மட்டமாநாட்டை அடுத்து உடனடியாகவே உயர்மட்டக்குழுவினர் கொழும்புதிரும்பினார்கள். (ம-7,43,77)

### உயர்பாதுகாப்பு

பட்ட நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அமைச்சர் மிலிந்தமொறகொட படை உயரதிகாரிகள் மற்றும் பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ சகிதம்நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

முக்கியத்துவம் வாய்ந்த தனது யாழ் விஜயம் தொடர்பாக அமைச்சர் மிலிந்த மொறகொட எமது வலம்புரி செய்தியாளருக்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ், குடாநாட்டு உயர் பாதுகாப்புவலயத்தில்மீள்குடியேற்றம்சம்மந்தமாக இறுதி முடிவுகள் எதுவும்எடுப்பதற்காகநாம்வரவில்லை. ஆனால் அவ்விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கே வந்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் யாழ் ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களையும், அமைச்சர் தி' மகேஸ்வரன் ஆகியோரையும் சந்தித்துப் பேசியுள்ளோம். நாம் கொழும்பு திரும்பியதும் இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளோம் என்றும் அரசு இதற்கு சுமுகமான தீர்வைக்காண விரும்புகிறதென்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார். (ம)

### கடலோரக்காற்று

மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், போராளிகள் ஆர்வலர்கள் என பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

திரைப்பட வெளியீட்டுரையை யாழ்மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதியும் மதிப்பீட்டுரையை யாழ்பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி என்.சண்முகலிங்கம் சலனசித்திரம் அமைப்பாளர் கா.செந்தில்வேல் ஆகியோரும் நிகழ்த்தினர்.

இதேவேளை நேற்றைய தினம் வவுனியாவிலும் கடலோரக்காற்று வெளியிடப்பட்டது. (த)

### நோர்வேத்

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

விடுதலைப் புலிகளை பொறுத்தமட்டில் அவர்கள் ஒரு தீவிரவாத அமைப்பினர். அவர்கள் இன்னமும் ஆயுதங்களைக் கைவிடவில்லை. இந்நிலையில் அவர்களுக்கு நவீன வானொலிக் கருவிகள் வழங்க நோர்வே தூதுவர் துணைபோனமை பாரதூரமான குற்றமாகும். இந்நிலையில் நோர்வே தூதுவர் மீது நோர்வே அரசு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி அக் கடிதத்தில் கேட்டுள்ளார். (ம)

## வானொலிக் கருவி இறக்குமதி விவகாரம்

# நோர்வே பிரதமர் ஜெல்லிடம்

# ஜனாதிபதி அதிருப்தி வெளியீடு

(கொழும்பு)

நவீனவானொலி ஒலிபரப்பு உபகரணங்களை புலிகள் பெற்றுக் கொள்வதில் நோர்வேத் தூதரகம் ஆற்றிய பங்களிப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டார நாயக்க தனது அதிருப்தியை நோர்வேப் பிரதமரிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

இது தொடார்பில் ஜனாதிபதி சந்திரிகா நோர்வேப் பிரதமர் ஜெல் பொண்டெவிக்கிற்கு இவ்வாரம் கடிதம் ஒன்றினை அனுப்ப விருப்பதாகவும் அறியப்படுகிறது.

இது இவ்விதமிருக்க புலிகளுக்கு வானொலி ஒலிபரப்பு உபகரணங்களை வழங்கிய விவகாரம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைவது குறித்தும் இவ்விடயத்தினால் இந்திய அரசு கொண்டுள்ள நியாயமான கவலை குறித்தும் இக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் விரைவில் இடமாற்றம் பெறுவார் என்ற செய்திக்கும் ஜனாதிபதியின் இது விடயம் குறித்தான நிலைப்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (உ)

## கொழும்பு மாநகரில் பொலிஸார் உசார்

(கொழும்பு)

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நேற்றும் இன்றும் கொழும்பில் விசேட பாதுகாப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதிப்பொலிஸ்மா அதிபர் போதிலியனகே தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் மற்றும் அரசியல் பிரதி நிதிகளின் பாதுகாப்புக் கருதி கொழும்பு நகர பிரதான வீதிகளில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபை முன்றல் காலி முகத்திடல் போன்ற இடங்களில் பொலிஸார் மேலதிகமாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (உ-8)

## கொழும்பு மருத்துவர் குழு நேற்று யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் தற்போது பரவிவரும் வைரஸ்காய்ச்சலுக்கான காரணங்களைக் கண்டறியும்பொருட்டு வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் நோயாளர்களிடம் இருந்து மாதிரிப் பரிசோதனைக்காகப் பெறப்பட்ட இரத்தம் நேற்று கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 11 மணியளவில் கொழும்பிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த வைத்திய நிபுணர் குழுவினர் நோயாளர்களிடமிருந்து பெறப்பட்ட இரத்தத்துடன் நேற்று மாலை கொழும்பு பயணமாகினர்.

இம்மருத்துவ நிபுணர் குழுவில் வைரஸ்நோயியல்நிபுணர்களான டாக்டர் பி. என். பீரிஸ், டாக்டர் பொயா கொலம்பகே மற்றும் பொதுச் சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் டாக்டர்டுவாடி சில்வா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். (த-7)

## அனலைதீவு ப.நோ.கூ. சங்கத்திற்கு நிரந்தர கட்டடமில்லை

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிரந்தரக் கட்டட வசதி செய்து தருமாறு ஊர்காவற்றுறை. உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கட்டட வசதியின்றி இன்னல் படுவதாகவும் கட்டடத்தை வாடகைக்கே அமர்த்த வேண்டியுள்ளதாகவும் இதனைக் கருத்திற் கொண்டு புதிய நிரந்தரக் கட்டட வசதி செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

புதிய கட்டடம் அமைக்க, உதவி கோரியுள்ள அதே வேளை பார ஊர்தி உடற் கோப்பு செய்வதற்கும் உதவி செய்யுமாறு கோரப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (உ)

### விபத்தில் படுகாயம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணப்பிரிவு நிறைவேற்று பொறியியலாளர் சிவநேசராஜா (வயது52) கடந்த 29ம்திகதி விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கிவந்து கொண்டிருந்தசமயமே சைக்கிள் விபத்துக்குள்ளானது.

அவர் தற்போது கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-59)

# இன்று ஒரு தகவல்

## உண்மையான தேடல்!

ஒருவருக்கு ஒர் ஆசை கடவுளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை! அதற்கு என்ன பண்ணுவதென்று யோசித்தார். என்னென்னவோ பண்ணிப் பார்த்தார். ஒன்றும்சரியாக வரவில்லை. கடவுளைப் பார்க்க முடியவில்லை. அந்தச் சமயம் பார்த்து ஒரு ஆன்மீகப் பெரியவர் (ஆதிசங்கரர்) அந்த ஊருக்கு வந்தார். இவர் உடனே அவரிடம் ஓடிப் போய் "நான் இறைவனைப் பார்க்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒரு வழி சொல்லுங்கள்!'' என்று கேட்டார். அதற்கு அவர் நீ தனிமையான ஒரு இடத்தில் இறைவனை நினைத்து தியானம் பண்ணு! கடவுள் காட்சி கொடுப்பார்' என்று சொன்னார்.

உடனே இவர் ஒரு காட்டுக்குப் போனார்... கண்ணை மூடினார்... உட்கார்ந்து விட்டார். தியானம் பண்ண ஆரம்பித்துவிட்டார். 'ஏய்... யார் நீ.. இங்கே என்ன பண்ணுகிறாய்? என்று ஒரு சத்தம். இவர் கண்ணைத் திறந்து பார்த்தார். பக்கத்தில் ஒரு வேடன் நின்று கொண்டிருந்தான். அவன் மறுபடியும் கேட்டான். 'இங்கே என்ன பண்ணுகிறாய்?' என்று.

'நான் இறைவனைத் தேடித் தியானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன்'. என்றார் இறைவனா? இது எப்படி இருக்கும்... சிங்கம் மாதிரி இருக்குமா? புலி மாதிரி இருக்குமா? கரடி மாதிரி இருக்குமா? எப்படி இருக்கும் சொல்? எனக்குத் தெரியாதது இந்தக் காட்டில் எதுவுமே இல்லை நீ விபரத்தைச் சொல்லு. அது எங்கே இருந்தாலும் பிடித்துக் கொண்டு வந்து விடுகிறேன்' என்றான் அவருக்கு இது சங்கடமாகப் போயிற்று.

'இவன்... விபரம் தெரியாத ஆளாக இருக்கிறான்... நமது தியானத்துக்கு வேறு இடைஞ்சலாக இருப்பான் போலஇருக்கிறதே இவனது தொந்தரவிலே இருந்து நாம் எப்படி மீள்வது' என்று யோசித்தார் மறுபடியும் அவன் திரும்பி அங்கே வரக்கூடாது இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார். உடனே அவனிடம் 'இதோ பாரப்பா.. இறைவன் எப்படி இருப்பார் என்று கேட்டாய் அல்லவா? அவனுடைய தலை சிங்கம் மாதிரி இருக்கும். உடம்பு மனிதன் மாதிரி இருக்கும். அதாவது மனித உடலில் சிங்கத்தினுடைய தலை! எங்கேயிருந்தாலும் பார்த்துப் பிடித்துக் கொண்டு வா என்றார்.

சரி பிடித்துக் கொண்டு வருகின்றேன் என்று சொல்லி அவன் புறப்பட்டான். காலையில் புறப்பட்டவன் காடுபூராவும் தேடி அலைகிறான் தண்ணீர்கூடகுடிக்கவில்லை சாயந்தரம் ஆகிவிட்டது. மிகவும் களைத்துப் போய்விட்டான். நினைத்துப் பார்த்தான் நான் இந்தக் காட்டுக்கு ராஜா! என்னாலேயே ஒரு மிருகத்தைக் கண்டுபிடிக்கமுடியவில்லையே இதன் பின்னரும் நான் உயிரோடு இருக்க வேண்டுமா? என்று யோசித்தான்.

உடனே அங்கேயிருந்த ஒரு கொடியைப்பறித்தான். அதை ஒருமரத்திலே கட்டினான் தூக்குக்கயிறு மாதிரி தற்கொலை பண்ணுவதற்காக அதில் கொண்டு போய் தலையை விட்டான். அந்த நேரம் பார்த்துப் பக்கத்திலே, இருந்த ஒருபுதரிலே லேசாக ஒரு சலசலப்பு! என்னவென்று திரும்பிப் பார்த்தான் அங்கே ஒரு உருவம் நின்று கொண்டிருந்தது. அதற்கு மனித உடல், சிங்கத்தினுடைய தலை

அடடா உன்னைத் தானே இவ்வளவு நேரமாகத் தேடிக் கொண்டிருக்கின்றேன் என்று இறங்கி ஓடி வந்தான் அதை அந்தக் கொடியிலேயே சுற்றிக்கட்டி இழுத்துக் கொண்டு வந்தான் அந்தப் பெரியவரிடம் இதோ பார்! நீ சொன்ன மிருகம் கொண்டு வந்து விட்டேன் என்றான். இவர் ஒன்றும் புரியாமல் கண்ணைத் திறந்து பார்த்தார். அந்தரத்திலே அந்தக் கொடி ஏதோ ஒரு உருவத்தைச் சுற்றியிருப்பது தெரிந்தது உடனே வந்திருப்பது இறைவன் தான் என்று புரிந்து கொண்டார்.

அந்தத் திசையை நோக்கி வணங்கினார்: 'இறைவா! இங்கே நான் உன்னைநினைத்துத் தியானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன் என்னை விட்டு விட்டு இந்த உயிரைக் கொல்கின்ற வேடனுக்குக் காட்சி கொடுத்திருக்கிறாயே. இது நியாயமா?' என்றார்.

அப்போது அசரீரியாக அந்தக்குரல் கேட்டது. இறைவன் சொன்னார். 'நீஎன்னையே நினைத்தாலும், உன்னுடைய முழு மனமும் என்னிடம் வரவில்லையே! ஆனால் இந்த வேடன் காலையிலிருந்து மாலைவரையும் என்னை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான். தண்ணீர் கூடக் குடிக்காமல் முழுமனதோடு என்னைத் தேடினான்: இது தான் உண்மையான தேடல்! அதனாலேதான் அவனுக்குக் காட்சி கொடுத்தேன்' என்று,

இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், எந்த ஒரு உண்மையைத் தேடுவதானாலும், அப்படித் தேடுவதுஉண்மையான தேடலாக இருக்க வேண்டும் என்பதுதான். ஒரு திருவிழாக் கூட்டம்ஒருபெண்ணினுடைய கழுத்திலிருந்த சங்கிலி திருட்டுப் போய்விட்டது. அந்தக்கும்பலில்எல்லோரும் திருடனைத் தீவிரமாகத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் மும்முரமாகத் தேடிக் கொண்டிருந்த ஒருவர், 'எவ்வளவு தான் உண்மையாகத் தேடினாற் கூட அந்தத் திருடன் கிடைக்க மாட்டான் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது' என்றார்.

'எப்படிச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டார் பக்கத்தில் நின்றவர். அவரின்காதோடு காதாக இவர் 'இப்பொழுது நாம் எல்லோரும் தேடிக் கொண்டிருப்பது என்னைத் தான்' என்று சொன்னார்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# தீவகத்தில் கட்டாக் காலிகளாக முப்பது ஆயிரம் கால்நடைகள்

## விவசாயிகளின் முயற்சி வீண்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்டாக்காலி கால் நடைகளினால்விவசாயப்பயிர்கள்அழிக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டமடைகின்றனர்.

சமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் கட்டாக்காலி கால் நடைகளின் நடமாட்டத்தை இல்லாமல் செய்வதற்குப் பொது மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் தீவகத்தில் மொத்தமாக 20 ஆயிரம் விவசாயிகள் வாழ்கின்றனர். ஆனால் 30 ஆயிரம் கால் நடைகள் கட்டாக்காலிகளாக அப் பிரதேசத்தில் அலைந்து திரிகின்றன. இதன் காரணமாக தீவகத்தில் விவசாய உற்பத்தி நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைய நேரிடுகின்றது எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் யாழ் மாவட்ட விவசாயிகளின் வருமானப் பெருக்கத்திற்கான புதிய திட்டங்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (உ-77)

# வாக்காளர் இடாப்பு கணனிமயம்

(கொழும்பு)

வாக்காளர் இடாப்புக்களை கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இந்த வாக்காளர் இடாப்புகள் மாவட்டம் தோறும் புதுப்பிக்கப்படும் போது மாற்றங்களை இலகுவான முறையில் மேற்கொள்வதற்கு கணனியைப் பயன்படுத்தும் நடவடிக்கைகளைத் தேர்தல் திணைக்களம் செய்து வருகிறது. (வ)

# இராசி பலன்

01-01-2003

(மார்கழி 17, புதன்)

சதுர்த்தசி பி. இ: 3 38 வரை

கேட்டை பி.ப 6.49 வரை

இராகுகாலம்:- 12-29-1-59

நல்லநேரம்-4-59--6-29.

**மேஷம்**

பிரயாணபயம், நண்பர்கள் வெறுப்பு, முயற்சிதடங்கல், ரோகநிலை

**இடபம்**

காரியசித்தி, நல்லவரவேற்பு, தனலாபம், எதிர்பாராதநன்மை

**மிதுனம்**

வாக்குபலிதம், காரிய சாதனை, மனமகிழ்ச்சி, சத்துருஜெயம்

**கடகம்**

உடல்நலக்குறைவு, காரிய தாமதம், தாழ்ந்தசுபாவம், வியாபாரநன்மை

**சிங்கம்**

இலட்சுமிகரம், அற்பர் உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, முயற்சிதாமதம்

**கன்னி**

கூட்டுமுயற்சி, வாக்கு மேன்மை, தனவரவு, புதிய பொருள்சேர்க்கை

**துலாம்**

சௌரவக்குறைவு, பொருள் விரயம், மாதர்நட்பு, நிலைக்கேடு

**விருச்சிகம்**

நல்லமுயற்சி, சயனசுகம், போசனசுகம், ஆழ்ந்தசிந்தை

**தனுசு**

பிதாசிந்தை, மனக்குழப்பம், தொழில் கஷ்டம், முயற்சிதாமதம்

**மகரம்**

தொழில்சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம் பெருமையடைதல்

**கும்பம்**

கடினஉழைப்பு, உற்சாகம், பிறர்உதவி, சுபநிகழ்ச்சி

**மீனம்**

ஆன்றோர் ஆசி, வீண் பயம், புதியதிட்டமிடல், உடல்உழைப்பு

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)

வளவன்

# பஸ் கட்டணங்கள் இவ்வாண்டு உயரும்

(கொழும்பு)

பஸ்கட்டணங்கள் யாவும் இவ்வருடம் ஒகஸ்ட்மாதம் முதல் மீண்டும் மற்றியமைக்கப்படலாம் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ஈ.பி. எவ். டலகுணே தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில்நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஆணைக்குழுவின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அம்மாநாட்டில் அவர் தொடர்ந்து பேசுகையில்; இன்று தொடக்கம் மேல் மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும்தனியார் பஸ்களிலும் கட்டாயம் பயணச்சீட்டு வழங்கப்படவேண்டும்

பயணிகள் பயணச்சீட்டை வழங்காவிட்டால்15 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரை தண்டப்பணம் அறவிடப்படும் என்பதுடன், பஸ் நடத்துநர்களின் அனுமதிப் பத்திரமும் இரத்துச் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

# விடுமுறையில் சென்றோர் விடுதிக்கு திரும்பவும்

## மட்டு, கல்வியியற் கல்லூரி அழைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாம் வருட மாணவர்களிற்கான விரிவுரைகள் ஜனவரிமாதம் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் விடுமுறையின் போது வீடுகளிற்கு சென்ற மாணவர்களை 17ஆம் திகதிக்கு முன்னர் விடுதிக்குத் திரும்புமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.பாக்கியராஜா அறிவித்துள்ளார்.

அத்துடன், புதிய மாணவர்களிற்கான விரிவுரைகள் ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்றும் அறிவித்துள்ளார். (உ-10)

# பாதுகாப்பு வலய விவகாரம் பேசித் தீர்க்க முடியும்

## டிரோன் நம்பிக்கை

(கொழும்பு)

அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக தற்போது எழுந்துள்ள நெருக்கடிகள் சமாதான நடவடிக்கைகளை முறிவடையச் செய்யமாட்டாதென, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதி உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில்;

இந்த நெருக்கடி தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதே வேளை, அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும் சில ஊடகங்கள் வெளியிடும் செய்திகள் கவலை அளிப்பதாக உள்ளன.

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இதனை சர்வதேச உலகமே தெளிவாகபுரிந்து கொண்டுள்ளது.

எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தற்போது முட்டுக் கட்டையாக உள்ள இவ்பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக பிரச்சினையை பேசித் தீர்க்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

# பொலிஸை அவமதித்த அதிகாரிமீது நடவடிக்கை

(கொழும்பு)

ஒரு பொலிஸ்அதிகாரிதனது கடமைகளை செய்ய முற்பட்டவேளையில் அதில் குறுக்கிட்டதுடன் அந்த அதிகாரியை அவமதிக்கும்வகையில் பேசியதாக பொ. ஐ. மு. பிரமுகர் ஸ்ரீபதி சூரியாராச்சிமீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக விசாரிக்கப்படுவதற்காக அவர் கந்தானை பொலிஸிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கு சதிசெய்யப்படுவதாக செய்திவெளியிட்டு இப்பொழுது சீ ஐ டீ யினரால் விசாரிக்கப்படுவரும் விடயம்தொடர்பில் லக்பிம பத்திரிகையின் முகாமையாளரான திருமதி ரெக்லா பெர்னாண்டோவுக்கு அழைப்பாணை வழங்குவதற்குபொலிசார் சென்றபோதே அவரது கணவரான சூரியாராச்சி அவதூறான வார்த்தைகளால்ஏசியிருந்தார்.

(10-ம் பக்கம் பார்க்க)

# வாரி வளவில் இருந்து வான் சேவை ஆரம்பம்

(காரைநகர்)

காரைநகரில் தனியார் போக்குவரத்து சேவை இன்று தொடக்கம்காரைநகர் வாரிவளவில் இருந்துஆரம்பிக்கப்படவுள்ளது.

1996 ஆம்ஆண்டு மீளக்குடியமர்வுக்குப் பின்னர் மூளாயில் இருந்து சேவையிலீடுபட்ட தனியார் மினிவான்கள் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப காரைநகருக்கான சேவையை மேற்கொண்டன.

அனைத்து சேவைகளும் நாளைமுதல் வாரிவளவில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ-246)

# ஈரான் சிறையில் தீ 27கைதிகள் பலியாகினர்

(தெஹ்ரான்)

ஈரானின் வடபகுதியிலுள்ள கோபன் நகரில் சிறைச்சாலையொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 27கைதிகள் பலியானதுடன் 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பலநூற்றுக்கணக்கான கைதிகள் தங்கியிருக்கும் இச் சிறைச்சாலையில் தீப்பற்றிக் கொண்டதையடுத்து அங்கிருந்த ஏனைய கைதிகள் பாதுகாப்பான இடமொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை திடீரென ஏற்பட்ட மின் ஒழுக்கினால் இத்தீவிபத்து இடம்பெற்றது என்று ஒரு தரப்பினர் கூறுகின்றபோதும் சிறைச்சாலையில் தீப்பற்றிக் கொண்டதற்கான உண்மைக் காரணம் இதுவரை வெளியிடப்படவில்லை. இதனையடுத்து இவ் விபத்துக் குறித்து ஈரானியப் பொலிஸார் உடனடிவிசாரணைகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைத்த அதிகாரபூர்வ செய்திகள் கூறுகின்றன. (பி-2)

உலக தரிசனம்

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள உலகின் மிக உயரமான இரட்டைக் கோபுர கட்டடத்திலிருந்து பரசூட்டில் குதிக்கும் போட்டி நடைபெற்றது. இதில் 16நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் கலந்து கொண்டனர். ரஷ்ய வீரர் ஒருவர் 73ஆவது மாடியில் இருந்து குதிப்பதை படத்தில் காண்கிறீர்கள்.



## மலேஷியாவிடம் அனுமதிகோருகிறது இந்தோனேஷியா

(ஜகார்த்தா)

மலேஷியாவில் தடுத்து வைக்கப்படிருக்கும் முஸ்லிம் தீவிரவாதிகளை விசாரணை செய்வதற்கு அந்நாட்டின் அனுமதியினை இந்தோனேஷியப் பொலிஸார் கோரியிருக்கின்றனர்.

பாக்தாத்தில் சிறைவைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் தீவிரவாதிகளின் தலைவர் அபூபக்கர் ப.்கீர் பற்றி மலேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு நன்கு தெரியும்.

இதனால் அவர்களை விசாரணை செய்வதற்கு மலேஷிய அரசு அனுமதி தரவேண்டுமென இந்தோனேஷியப் பொலிஸார் கேட்டிருந்தனர். (பி-2)

## ஈராக்கிற்கு எதிராக விஞ்ஞானிகளைப் பயன்படுத்த அமெரிக்கா புதிய தந்திரம்

### சதாமின் ஆலோசகர் குற்றச்சாட்டு

(பக்தாத்)

ஈராக்கிற்கு எதிராக பலத்த குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் நோக்கில் அமெரிக்கா ஈராக்கிய விஞ்ஞானிகளை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்ல முயற்சிப்பதாக ஈராக்கின் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் ஆலேசகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கிலுள்ள சில விஞ்ஞானிகள் அமெரிக்காவினால் வழங்கப்படுகின்ற நிதியுதவியுட்பட பல்வேறு சலுகைகளைக் கருத்தில் கொண்டு தவறான கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடும். இதன் மூலம் ஈராக்மீது பலத்த குற்றச் சாட்டுக்களை முன்வைக்கலாம் என்ற திட்டம் அமெரிக்காவுக்கு இருப்பதாக அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

இதேவேளை ஈராக்கிலுள்ள சுமார் 500விஞ்ஞானிகளுடைய பெயர்ப்பட்டியலை ஐக்கிய நாடுகளின் ஆயுத சோதனையாளர்களிடம் ஈராக் கடந்த சனிக்கிழமை கையளித்திருந்தது.

இதனையடுத்து. பல விஞ்ஞானிகளை அவர்கள் பேட்டிகண்டிருப்பதாக ஈராக்கின் செய்திகள் கூறுகின்றன. (பி-2)

## நம்பிக்கை வாக்கெடுப்பில் பாக். புதிய பிரதமருக்கு வெற்றி

(இஸ்லாமாபாத்)

நேற்று முன்தினம் பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் பாகிஸ்தான் புதிய பிரதமர் சவருலால் ஹான்ஜமாலி வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் ஆட்சி அமைக்கக் கூடிய பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத் நிலையில் பிரதமர் சவருலால்ஹான் ஜமாலியின் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சி கூட்டாட்சியை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து 60நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் தம் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துமாறு பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப் அரசமைப்பின் கொள்கைக்கு ஏற்ப வேண்டுகோள் விடுத்திருந்தார்

இதற்கமைய 342ஆசனங்களைக் கொண்ட பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் 188வாக்குகளைப் பெற்று புதிய பிரதமர் சவருலால் ஹான் ஜமாலி வெற்றி பெற்றுள்ளார். (பி-2)

### அடுத்துவரும் தேர்தலில் "போட்டியிட மாட்டேன் பிலிப். ஜனாதிபதி அறிவிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸின் தற்போதைய ஜனாதிபதி ஜோரியா அரோய் அடுத்த 2004ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு பிலிப்பைன்ஸின் அரசியல் பின்னணியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இக் கருத்தை மறுத்துள்ள ஜோரியா அரோயின் தனது இந்த முடிவு அரசியலில் எதுவித குழப்பத்தையோ, மாற்றத்தையோ ஏற்படுத்த மாட்டாது.

மாறாகப் பொருளாதார ரீதியில் புதியதோர் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியே இதுவென உறுதிபடத் தெரிவித்திருந்தார். (பி-2)

## உலகச்சந்தையில் எண்ணெய் விலை சரிவு

(றியாத்)

எண்ணெய் வினியோகத்தை அதிகரிக்கப் போவதாக 'ஒபெக்' எனும் எண்ணெய் உற்பத்தி நாடுகளின் அமைப்பு அறிவித்ததையடுத்து உலகசந்தையில் மசகு எண்ணெய்விலை சரிந்துள்ளது.

அமெரிக்கா, ஈராக் போர்மூளக் கூடும் என்ற அச்சம் வெனிசுவேலாவில் இடம்பெற்ற எண்ணெய்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் போன்ற காரணங்களால் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை கடந்த சில வாரங்களாக உச்சநிலையில் இருந்து வந்தது.

இந்த விலையேற்றம் அடுத்த இரு வாரங்களுக்குள் குறைக்கப்படாவிட்டால் நாளொன்றுக்கு உலக சந்தைக்கான எண்ணெய் விநியோகத்தை 5இலட்சம் பீப்பாக்களினால் அதிகரிப்பதென ஒபேக் அமைப்பின் தூதுக்குழு அறிவித்திருந்தது.

இதனையடுத்து உலக சந்தையில் நிலவி வந்த எண்ணெயின் விலை உயர்வு 4சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. (பி-2)

## மாவோவாதிகளின் பெயர் பட்டியல் வெளியிடப்படும்

(காட்மண்டு)

தடுத்துவைக்கப்பட்டுள்ள மாவோ தீவிரவாதிகளின் பெயர்ப்பட்டியலை வெளியிட நேபாள அரசு தீர்மானித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நோக்கிலேயே இத்தீர்மானத்தை நேபாள அரசு எடுத்துள்ளதாக நேபாளத்தின் இடைக்காலப் பிரமர் லோகேந்திரபகதூர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு சகல நேபாள மக்களுக்கும் மாவோ தீவிரவாதிகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதற்கமைய கடந்த இரண்டு நாட்களாக நேபாளத்தில் வேலை நிறுத்தம் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் பெயர்ப்பட்டியலை வெளியிடத் தீர்மானித்தது குறித்து தகுந்த பதிலொன்றை மாவோ தீவிரவாதிகள் வெளியிட வேண்டுமென நேபாள அரசு மேலும் கூறியுள்ளது. (பி-2)



அமெரிக்காவின் சேன்டிகோ வன விலங்குப் பூங்காவில் பிறந்து மூன்று நாட்களே ஆகியுள்ள இந்திய காட்டாமிருகம், தாயுடன் உள்ளது. தற்போதே இதன் எடை 84கிலோ உள்ளது. இந்தக் காண்டாமிருகம் சுமார் 16மோதகாலம் தாயின் வயிற்றில் இருந்து கடந்த 23ஆம் திகதியே பிறக்கும் என்று எதிர் பார்க்கப்பட்ட நிலையில், 27ஆம் திகதி தான் பிறந்தது. உலகி லேயே சுமார் 2ஆயிரம் வரைதான் இந்த வகைக் காண்டா மிருகங்கள் உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.


### அல்ஜீரிய நபர் பாரிஸில் கைது

(பாரிஸ்)

பிரஞ்சு தலைநகரான பாரிஸின் பிரதான சர்வதேச விமான நிலையத்தில் கடமையாற்றிவந்த அல்ஜீரிய நாட்டைச் சேர்ந்த ஊழியர் ஒருவரை பிரஞ்சுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனது மோட்டார் வாகனத்தில் கையடக்கத் துப்பாக்கிகள், வெடிமருந்துகள் என்பன வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

இக்கைது நடவடிக்கையையடுத்து அவரது வீட்டைச சோதனையிட்ட பொலிஸார் அங்கிருந்தும் தன்னியக்கத் துப்பாக்கி மற்றும் வெடிமருந்துப் பொருட்களைக் கண்டுபிடித்துள்ளதுடன் இந்த நபரின் தந்தையையும் இரண்டு சகோதரர்களையும், நண்பரொருவரையும் கைதுசெய்துள்ளதாக மற்றொருதகவல் கூறுகின்றது. (பி-2)



மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற போட்டி ஒன்றில், சீன நடனக் குழுவினர் விலங்குகளைப் போன்ற உருவப்பொம்மையை வைத்து நடத்திய நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. சுமார் 35மீற்றர் நீளமுள்ள பொம்மையை வைத்துக் கொண்டு 15நடனக் கலைஞர்கள் இந்த நடனத்தை நிகழ்த்திக் காட்டினர்.

## கார் விபத்து ஐவர் பலி

(மாட்ரிக்)

ஸ்பெயினில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5பேர் உயிரிழந்துள்ளனர்.


வடக்குமெற்றிக் நகரிலிருந்து பிரதான வீதியூடாகப் பயணம் மேற்கொண்ட இவர்களது கார் எண்ணெய்த் தாங்கி வாகனம் ஒன்றுடன் மோதியதால் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

இவர்கள் தமது உறவினர் வீட்டுக்கு விடுமுறையைக் கழிப்பதற்காகச் சென்று கொண்டிருந்தார்களெனவும் அந்த வேளையில் இச்சம்பவம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (பி-2)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2003

துன்பங்கள் நீங்கி துயரங்கள் பறந்தோட
அனைவருக்கும் எம்மினிய புது வருட நல் வாழ்த்துக்கள்

- புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள்
- அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்
- பற்றறி வகைகள்
- அஸிட் வகைகள்




அனைத்தையும் நிதான விலையில் ஓரிடமாகப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## அருள் விநாயகர் மோட்டர்ஸ்

106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்


(C/5552)

---

அகிலமெங்கும் அமைதி நிலவ, எம் அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் ஆதரவாளர்கள் யாவருக்கும் எம் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

சுவைமிகு ஐஸ்கிறீம் வகைகளான

- ※ நட்ஸ் ஐஸ்கிறீம்
- ※ ஜெலி ஐஸ்கிறீம்
- ※ புரூட்சலாட் ஐஸ்கிறீம்
- ※ வெனிலா ஐஸ்கிறீம்
- ※ நட்ஸ்பார்
- ※ மட்டன் றோல்
- ※ மிக்ஸர்
- ※ லட்டு
- ※ மஸ்கட்
- ※ கேக் வகைகள்
- ※ ஸ்பெஷல் பிடா



போன்றவற்றினைப் பெற்றிட

## குலம் கிறீம் ஹவுஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 2222147

கிளை: **Hulam Cream House**

ஆல்டிச் சந்தி, மானிப்பாய்.

(C/5551)

---

## அனைவரது உள்ளத்திலும் அமைதி நிலவிட எம் உளம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

## எக்ஸ்போ ஏவியேஷன் கொழும்பு செல்கிறது

ரூ. 2,425/- ஒரு வழி

- யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம் - இலவசக் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து.
- வசதியான புறப்படும், சென்றடையும் நேரங்கள்.
- பலதரப்பட்ட பிரயாண வசதிகளுடன் தெரிவு மற்றும் சிக்கன வகுப்புகளுடன் இயங்கும் ஒரேஒரு உள்ளூர் விமான சேவை.
- சுமுகமான, அனுபவமுள்ள விமானப் பணியாளர்கள்
- யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் தொடங்குவதற்கு அங்கீகாரம் பெற்ற முதலாவது விமான சேவை
- திங்கள், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாலை நேர விமான சேவையும் உண்டு.
- எமது விசுவாசத்தை மேலும் உறுதிப்படுத்த 'ரிவோட்ஸ் பிளஸ்' சலுகை.

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் கட்டணச் சீட்டுகளுக்கும்

**எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவேட்) லிமிட்டட்**

1E ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021-2223891, 0777 - 730555, 0777 - 730666
464, காலி வீதி, கொழும்பு -3
தொ.பே: 074-512668 (3வரிசைகள்)

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2003

## அரசியல் தீர்வுக்கு புத்தாண்டு வழிவகுக்கும்

### அமைச்சர் மகேஸ்வரன் புத்தாண்டுச் செய்தி

20 ஆண்டு கால போர்ச் சூழலில் மிக மோசமாக பாதிக்கப் பட்ட தமிழ் மக்களும் ஏனைய சிங்கள முஸ்லிம் மக்களும் புதிய அரசாங்கத் தின் சமாதானத்தை கட்டி எழுப்புவதில் ஆர்வம் கொண்டுள்ளனர். ஒரு நல்ல அடித்தளம் அமைக்கப்பட்டு இலங் கையில் நீண்ட காலமாக தீர்க்கப் படாது இருந்த இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்டு வரும் நடவடிக்கை களுககு உலக நாடுகளில் பேராதரவு பெருகி வருகிறது.

இந்த நல்ல முன்னெடுப் புக்களை குழப்புவதற்கு முனைந்திருககும் தீய சக்திகள் இவ் ஆண்டில் தோல்வி காண்பார் என்பதில் ஐயமில்லை. மக்கள் சக்தியுடன் ஆட்சி பீடத்தை ஏற்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்நாட்டின் தேசியத் தலைவர் என்ற அடிப்படையில் செயற்படுகின்ற துணிவை பெற்றுள்ளார். இப் புத்தாண்டு பிரதமர் அவர்கட்கு மேலும் உறுதியையும் உற்சாகத்தையும் அளிக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளேன்.

அதே போன்று தமிழ் தேசியத் தலைவர் பிரபாகரனும் சமாதான முன்னெடுப்பில் உறுதியாகவும் நம்பிக்கையுடனும் இருந்து வருகின்றார். இரு தலைவர்களும் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு இப் புதிய ஆண்டு வழிவகுக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளேன். அனைத்து மக்களுக்கும் இப்புத்தாண்டு செழிப்புள்ள ஆண்டாக மலர வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

## சொந்த மண்ணில் சுகவாழ்வே ஆனந்தம்!

### புத்தாண்டுச் செய்தியில் டக்ளஸ்

அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! இந்த ஆண்டு புதிய நம்பிக்கைகளோடும் புதிய எதிர்பார்ப்புக்களோடும் புதியதொரு சூழலில் மலர்கின்றது. சொந்த மண்ணில் ஒவ்வொரு வருக்கும் சுகவாழ்வு கிடைக்க வேண்டுமென்பதே இந்த ஆண்டில் எமது எதிர்பார்ப்பு ஆகும்.

துப்பாக்கி வேட்டுக்களும், குண்டு வெடிப்புக்களும் எறிகணை வீச்சுக்களும், விமானக்குண்டு வீச்சுக்களும் கடந்த ஒரு வருடமாக இடம்பெறவில்லை. ஆனால் திருடர்களின் தொந்தரவுகளும், இனந்தெரியாத நபர்களின் இருட்டடிப்புக்களும் அவ்வப்போது நிகழத்தான் செய்தது. எனவே கடந்த ஆண்டு அமைதியில் கரைந்த ஒரு ஆண்டாக நாம் கருதவில்லை. மக்கள் நிம்மதிப் பெருமூச்சு வெளியிட்டதாக நாம் திருப்தி கொள்ள இயலவில்லை. ஊமைக்காயங்களால் எமது மக்கள் ஊனப்பட்ட ஒரு ஆண்டாகவே இது நிறைவு பெறுகிறது.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற திட சங்கற்பத்தோடும், மௌனமாய் அழுகின்ற எம்மவர்களின் கண்ணீரைத் துடைக்கும் ஆர்வத்தோடும் இதனைச் சாதிக்க முடியுமென்னும் இமாலய நம்பி க்கையோடும் புத்தாண்டை எதிர் நோக்குகின்றோம். அசைக்க முடியாத உறுதியோடும் தளர்ச்சி காணாத தன்னம்பிக்கையோடும் எமது மக்கள் ஒவ்வொருவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## நிரந்தர சமாதானம் உருவாக்கும் ஆண்டாகுக

### புத்தாண்டுச் செய்தியில் சுரேஸ் பிரேமச்சந்திரன்

ஓராண்டு காலமாக குண்டுச் சத்தங்களையும் வெடி ஓசைகளையும் மறந்து மூச்சுவிடக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதானது பெரிதும் வரவேற்கக் கூடிய விடய மாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், இவர்களுக்கிடையில் அனுசரணை யாளராகச் செயற்படும் நோர்வே அரசும் தமிழ் மக்கள் மத்தியில் ஓர் நம்பிக்கை கீற்றை உருவாக்கியுள் ளனர். இருண்ட குகைளின் முடிவில் வெளிச்சம் தெரியத் தொடங்கியுள் ளது. இவை நிரந்தரமாக வேண்டும் என்பதும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு கௌரவமான தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என் பதுமே தமிழ் மக்களின் எதிர்பார்ப் பாகும்.

இலங்கையின் ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளுக்கிடையில் உள்ள முரண்பாடுகளும், மிகவும் சிக்கல் வாய்ந்த அரசியல் சாசன மும், இனவாத சக்திகளின் எதிர்ப்பும் பேச்சுவார்த்தைகளையும், நிரந்தர தீர்வை நோக்கிய பயணத்தையும் முறியடித்துவிடுமா என்ற ஐயப் பாடுகளும் மக்கள் மத்தியில் உள்ளன. இந்த ஐயப்பாடுகள் நீக்கப்பட வேண்டுமாயின் சமாதானத்திற்கான செயற்பாட்டில் அரசாங்கமும் எதிர்கட்சியும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை ஒரே நாடாக இருப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பமும் இறுதி முயற்சியும் இதுவாகத்தான் இருக்கும் என்பதையும் எதிர்கட்சியினரும் ஜனாதிபதியும் புரிந்து கொள்ள வேண்டும். கட்சி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டு நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டால் பிறக்கும் புத்தாண்டு நாட்டின் சகல மக்களுக்கும் சாந்தியையும்-சமாதானத்தையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

பிறக்கும் புத்தாண்டானது நிரந்தர யுத்தநிறுத்தம் நிரந்தரத் தீர்வு நிரந்தரச் சமாதானம் ஆகியவற்றை உருவாக்கும் புத்தாண்டாக மலர வேண்டுமென வாழ்த்துவதுடன் மக்கள் தமது இல்லங்களில் மீளக்குடியமர்ந்து சிறப்புடனும் செழிப்புடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

சுரேஸ் பிரரேமச்சந்திரன்,
செயலாளர் நாயகம்,
ஈ.பி.ஆர்.எல்.எவ்.


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வீட்டுப்பாவனைப் பொருட்கள், எவர்சில்வர், அலுமினியம், பித்தளை, பிளாஸ்ரிக் மற்றும் கோயிலுக்குத் தேவையான விளக்கு, திருவாசி, தீப வகைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.



சிவன் மாளிகை லிமிட்டெட்
166, கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.


## பொங்கி வரும் புத்தாண்டு

பொங்கி வரும் புத்தாண்டே!
பொலிந்து மணம் பரப்பிடுவாய்
தங்கு மெழில் கொஞ்சிடவே
தரணி தனைக் காத்திடுவாய்!

புண் பட்ட பூவுலகில்
புரையோடிப் போயிருக்கும்
எண்ணற்ற இழிவுகளை
எடுத்தெறிவாய் இந் நாளில்

வல் லாதிக்கம் எனும்
வஞ்சனையால் நெஞ் சதிரும்
பொல்லா வினைகள் தமைப்
பொசுக்கிவிடு இந் நாளில்

கஷ்லும் கரைந் துருகும்
கவலைகளைப் போக்கி விடு
புல்லர்களைப் புறந் தள்ளிப்
பூதலத்தை வாழ விடு

~ கூத்தாடி~

## இன்பப் புத்தாண்டே இனிதே வா!

கனவுகள் கலைந்த கண்ணீரில் நிறைந்த
கொடிய வாழ்வு கடிதினிலே மறைந்திட
தனம் அழிந்து தரணியிலே எம்மைத்
தினம் வருத்திய யுத்தம் ஒழிந்திட
அல்லற்பட்டு அஞ்சி வாழ்ந்த தமிழினம்
ஆனந்தமாய் மீண்டும் ஆட்சி நடத்திட
ஈழமணித்திருநாடு சாந்தியொடு சமாதான வாழ்வடைய
இன்பப் புத்தாண்டே இனிதே வா!

அரியகுமார் யசீகரன்
க.கு.அ.இல.127

## ஈழவர் வளம் பெறவே...

"ஆண்டொன்று பிறந்தது மகிழ்ந்திடுவோம் நாமே
ஆடியே பாடி வரவேற்றிடுவோம் வாரீர்
ஆண்டாண்டு நாமுற்ற அவலங்கள் ஓய்ந்தன
ஆணவம் அகன்று சமாதானம் என்றதொரு
ஆதவன் உதித்தனன் பேரிருளை விலக்கியே
ஆவலுடன் நாமே புத்தாண்டில் வேண்டுகிறோம்
ஆண்டவன் கருணையுடன் ஈழவர் வளம் பெறவே"

-நயினை விஜயன்

## விரைந்து வா புதுவருடமே....

ஆயிரம் ஆண்டுகள்
ஆயிரம் விடியல்கள்
விடியாத காலைகள்
எத்தனையோ வருடங்கள்
அத்தனையும் செத்தன
ஆயிரம் கவிஞர்கள்
அரங்கேற்றிய கவிதைகள்
அத்தனையும் பித்தன் கதையாயின
இடியோசை கலையோசையாக
சமாதான தென்றல்
தென்மாங்கு இசைக்க
மூன்றில் சமாதானம் நிலைக்க
விரைந்திடுவாய் புதுவருடமே

-கவி. உமா

## சமாதான ஆண்டே நீ வருக!

அன்பு- பாசம்-பண்பு என்ற
சமாதான ஒளிக்கீற்றுக்கள்
மானிடத்தில் உருவாகி
அனைவரும் ஒன்றித்திட...
புத்தாண்டே வருக!

ஏற்றத் தாழ்வினையும்
ஏழ்மை என்ற இருளினையும்
நீ-அகற்றி,
சமாதான தீபமாக விளங்கிட
நீ வருக!

கவிசுகி
குருநகர்.

## புத்தாண்டில் கிடைக்கட்டும்

எண்ணங்களொன்றாக
ஒப்பந்த மொன்று உருவானது
துன்பங்களை யகற்றவென
தாய்லாந்தில் பேசினர்
கண்குளிரப்பார்த்தோம்
காது குளிரக் கேட்டோம்
விடுதலை வேட்கையால்
விண்ணுலகேகியோர்
விரும்பியவையனைத்தும்
புத்தாண்டில் கிடைக்கட்டும்.

மாருதி
ஆவரங்கால்


மலரும் புத்தாண்டு அனைவருக்கும் மகிழ்ச்சியை கொண்டு வர வாழ்த்துகின்றோம்.

தங்கத் தரணியில் தனியிடம் வகிக்கும்
தங்க நகைகளின் அரங்கம்



நகை மாடம்
49,(187), கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

Christmas New Year Sales...

வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

கிறிஸ்மஸ் நியூஇயரை முன்னிட்டு லைடனின் மகத்தான மலிவு விற்பனை. லைடனில் சகல பொருட்களையும் விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் விலைக்கழிவு
01.01.2003 புதன்கிழமை தொடக்கம்
15.01.2003 புதன்கிழமை வரை

பயன்பெற இன்றே நாடுங்கள்.

லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். T.P.2222381

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2003

## உலக சமாதானம் - ஒரு நிரந்தர அர்ப்பணம்

## 2003 - புத்தாண்டில் பாப்பரசரின் செய்தி

பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பர் 2003ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி கொண்டாடப்படும் 36வது உலக சமாதான தினத்திற்கான தமது செய்தியை வெளியிட்டுள்ளார்.

உலக சமாதானம் - ஒரு நிரந்தர அர்ப்பணம் எனும் தலைப்பில் கடந்த டிசம்பர் மாதம் 8ஆம் திகதி தமது ஆளுகையின் 25ஆம் ஆண்டில் வத்திக்கான் நகரில் இருந்து மேற்படி செய்தியை திருத்தந்தை திருத்தந்தை 23ஆம் அருளப்பர் தாம் இறப்பதற்கு 2மாதங்களுக்கு முன்னர் வெளியிட்ட உலக சமாதானம் என்ற திருமடலை அடியொற்றியே இச்செய்தி அமைக் கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

23ஆம் அருளப்பர் - நல்மனது படைத்த அனைவர்க்கும் - என்று ஆரம்பித்த உலக சமாதானம் என்ற திருமடலின் முதல் வசன மானது சமாதானம் பற்றிய முழுமையையும் தெளிவாகத் தெரிவிக்கின்றது என்ற வசனத்துடன் 2ஆம் அருளப்பர் சின்னப்பரின் 2003ஆம் ஆண்டுக்கான செய்தி ஆரம்பமாகிறது. எல்லாக் காலத்து மக்களும் மிக ஆவலுடன் எதிர்பார்க்கும் உலக சமாதான மானது இறைவனால் ஏற்படுத்தப்படும் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றினால் மட்டுமே ஏற்படுத்த முடியும் என்பதே அவ் வசனமாகும்.

திருத்தந்தை 23ஆம் அருளப்பர் இத் திருமடலை எழுதியபோது உலகிலே ஒழுங்கற்ற நிலையே தோன்றி இருந்தது. 20ஆம் நூற்றாண்டு பெரும் எதிர்பார்ப்பின் மத்தியில் ஆரம்பித்து இருந்தாலும் 60 ஆண்டுகளுக்குள் இரு உலக மகா யுத்தங்கள் நடந்தேறின. சொல்ல முடியாத மனித துயரமும் திருச்சபை வரலாற்றில் பெரும் கலாபனைகளும் இடம் பெற்றன. உலகிலேயே சமாதானம் என்ற திருமடல் வெளிவருவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாக பேளின் மதில் கட்டப்பட்டு நாடு மட்டும் இரண்டாக்கப்படவில்லை. இரண்டு விதமான புரிந் துணர்வும் ஏற்படுத்தப் ப ருந்தது. மதிலின் ஒரு பக்கத்தில் ஒரு விதமான வாழ்வும் மறு பக்கத்தில் இன்னு மொரு விதமான வாழ்வும் அமைக கப்பட்டிருந்தது நம்பிக்கை இல் லாத்தன்மையும் சந்தேக உணர் வுமே மேலோங்கி இருந்தது.



இத் திருமடல் வெளியிடப்படுவதற்கு முன்பாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் உரோமையில் ஆரம்பமாகின்ற வேளை கியூபா மிசைல்ஸ் சம்பந் தமாக அணு ஆயுத யுத்தம் ஒன்று ஆரம்பிக்கும் தறுவாயில் இருந் தது. உலக சமாதானத்தை நோக்கிய பயணத்தில் நீதியும் சுதந் திரமும் தடைபடுத்தப்பட்டிருந்தது. பனிப்போரின் பயத்தோடேயே மனித சமுதாயம் வாழவேண்டி இருக்கப்போகிறது எனப்பலர் பயந்தனர். சிறிய முறுகல் நிலையோ, சிறுதவறோ, உலக மனித சரித்திரத்தின் மோசமான யுத்தத்தை தோற்றுவிக்கும் நிலையே நீடித்தது.

உலக சமாதானம் சாத்தியமற்றது எனக்கருதியவர்களோடு திருத்தந்தை 23ஆம் அருளப்பர் ஒத்துப் போகவில்லை. அவரது திருமடல் தடை மதிலின் இருபக்கங்களையும், பிரிவினையையும் ஏற்படுத்தும் எல்லா மதில்களையும் இடித்துக்கொண்டு வந்தது. எல்லோரும் மனித குடும்பத்தின் ஒரு பகுதி என்பதையும் ஒருமைப் பாட்டையும் ஒவ்வொருவரோடு பேசி பாதுகாப்பையும், நீதியையும் எதிர்கால நம்பிக்கையையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது திருத்தந்தையின் திருமடல்.

23ஆம் அருளப்பர் தம்மன உள்ளுணர்வால் அறிந்து சமாதானத்திற்கு தேவையான காரணிகளை இனம் காட்டினார். உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் என்பதுதான் சமாதானத்தின் காரணிகள் எனத் தெளிவுபடுத்தினார். ஒருவர் தனது உரிமைகளை மட்டுமல்ல மற்றவர் பால் தமக்குள்ள கடமைகளையும் ஏற்றுக்கொள்ளும்போது உண்மையானது சமாதானத்தைக் கொண்டு வரும்.

ஒவ்வொருவரும் தமது செயற்பாட்டில் மற்றவரின் உரிமையை மதித்து தமது கடமைகளை அதற்காக நிறைவேற்றும்போது நீதியானது சமாதானத்தைக் கொண்டு வரும். மக்கள் மற்றவர்களின் தேவைகளை உணர்ந்து தம்மிடம் உள்ளவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து வாழும் போது அன்பு சமா தானத்தைக் கொண்டுவரும். முடிவுகளுக்கான வழிகளை மேற்கொள்ளும்போது மக்கள் மனச்சான்றின்படி நடக்கவும் தமது செயற் பாடுகளுக்கான பொறுப்பினை ஏற் கவும் செய்யும் போது சுதந்திர மானது சமாதா னத்தைக் கட்டி எழுப்புவதோடு அது நிலை பெறவும் செய்யும்.

நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் நம்பிக்கையோடும் மனச்சான்றோடும் நோக்கிய திருத்தந்தை 23ஆம் அருளப்பர் நடைபெற்றுக்கொண்டிருந்த சரித்திர நிகழ்வுகளை ஊகித்தார். விடயங்களை மேலோட்டமாகத் தெரிந்தது போல் எப்போதும் இருக்கவில்லை. போர்களினதும், போர் பற்றிய வதந்திகளினதும் செய்திகள் மத்தியில் ஆழமான ஒன்று செயற்பாட்டில் இருப்பதை அவர் உணர்ந்தார். ஆன்மீகப் புரட்சி ஒன்றின் நம்பிகையான ஆரம்பத்தை மக்கள் செயற்பாடுகளில் அவர் உணர்ந்தார். அந்த ஆன்மீகப் புரட்சியின் வழியில் உலக சமாதானம் மலர வேண்டுமென விரும்பினார். மனித சமுதாயம் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கியது. காலணித்துவ ஆட்சியின் முடிவும், புதிய சுதந்திர நாடுகளின் எழுச்சியும், தொழிலாளர்களது உரிமைகள் பாதுகாக்கப் பட்டமை, பொது வாழ்வில் பெண்களின் பங்கு என்பன எல்லாம் மனித இனம் ஒரு புதிய சரித்திரத்தினில் நுழைவதை உறுதிபடுத்தியது. தமது இயற்கையான, மனித மாண்பின் வழியாக எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்ற உண்மையை இது தெளிவுபடுத்தியது.

இவ்வாறாக உலக சமாதானம் என்ற திருத்தந்தை 23ஆம் அருளப்பரின் திருமடலை விளக்கித் தமது 2003ஆம் ஆண்டு சமாதானச் செய்தியை அமைத்திருக்கும் பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பர் செய்தியில் தெரிவிப்பது முக்கியமானது. சமாதானம் என்பது அமைப்புகள் சார்ந்ததல்ல. அது மனிதர்கள் சார்ந்தது. அமைப்புகள் ஞானத்தையும் அனுபவத்தையும் மட்டுமே தர முடியும்.

சமாதான சமிக்கைகள் மனிதர்களிடமிருந்து அதுவும் உள்ளத்தில் சமாதானத்தை அனுபவிப்பவர்களிடமிருந்து தான் பெறமுடியும். சமாதானம் செய்வோரின் உள்ளத்தின் வேலையே அதுவாகும். சமயங்கள் சமாதானத்தை உருவாக்குவதிலும் அதற்கான நிலைப் பாடுகளை உருவாக்குவதிலும் பெரும் பங்காற்ற முடியும். 2002ஆம் ஆண்டு தை மாதம் 24ஆம் திகதி அசிசியில் நடை பெற்ற உலக சமாதான செப தினத்தில் இந்நோக்கத்திற்காக பல சமயத்தவர்கள் ஒன்று கூடினர்.

23ஆம் ஆருளப்பர் இறைவனிலும் மனிதரிலும் நம்பிக்கை வைத்து நிரந்தர அமைதியும் சமாதானமும் அற்ற நிலை தோன்றி யிருந்தபோதும் உலகத் தலைவர் கள் அனைவரையும் உலகு பற்றிய ஒரு புதிய பார்வைக்கு அழைத்தார்.

2003ஆம் ஆண்டு உலக சமாதான தினத்திலும் நாம் இதே மனநிலையைக் கொண்டு உழைப்போம். இறை இரக்கத்திலும் அன்பிலும் நம்பிக்கை வைத்து சமாதானம் நிறைந்த ஒரு உலகைக் கட்டி எழுப்புவோம் என்ற அழைப்புடன 36வது உலக சமாதானத்தின் செய்தி முடிவடைகிறது.

**அருள்திரு
ரூபன் மரியாம்பிள்ளை**

## நல்லை ஆதீன முதல்வர் வழங்கிய புத்தாண்டுச் செய்தி



இன்று மலருகின்ற2003ம் ஆண்டின் வரவை முழு உலகமுமே மகிழ்வோடு வரவேற்கிறது.இந்த மகிழ்வும், வரவேற்பும் கடந்த ஆண்டுகளைவிட 2003ம் ஆண்டில் இலங்கை மக்களுக்கும் உரியதாக இருப்பது மனநிறைவைத் தருகிறது.

2002ம் ஆண்டில் பு,த்த சமாதான மலர் 2003ம் ஆண்டில் கனியாகி அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென நாமெல்லோரும் இறைவனைப் பிரார்த்திப் போமாக.

**என்றும் வேண்டும்
இன்ப அன்பு**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர. பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீனம்
நல்லூர்.

## சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



*மலரப் போகும் 2003ஆம் ஆண்டுக்கான ஆசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். மலரப்போகின்ற இப்புத்தாண்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் மகிழ்வையும், புத்துணர் வையும், நிரந்தர சமாதானத்தையும் வழங்க எல்லாம் வல்ல இறைவனையும் பிராத்திப்பதோடு மலருகின்ற இப்புத் தாண்டில் பழையனவற்றை மறந்து புதியனவற்றை உருவாக்க நாம் அனை வரும் திடசங்கற்பம் பூணுவோமாக.*

***பிரம்மஸ்ரீ ஜ. மகேஸ்வரக்குருக்கள்,
சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி.***

## யாழ். ஆயரின் புத்தாண்டு வாழ்த்து

நம்பிக்கை ஒளிக்கீற்றிலே மலர்ந்த 2002ஆம் அண்டு முடிந்து இன்னும் உறுதியான சமாதான ஒளிவீசும் 2003ஆம் ஆண்டு புதுவருடத்தினை நம்பிக்கையுடன் தொடங்கியுள்ளோம். நாம் கடந்து வந்த ஆண்டு காரிருளும், மரண நிழலிலும் வாழ்ந்த எம் மக்களுக்கும் எமக்கும் விடுதலை அளிக்கும் ஆண்டாக இருந்திருக்கின்றது. கொடிய போரின் அழிவு களும் அவலங்களும் நிறுத்தப்பட்டு அதற்கான உடன்படிக்கை செய்யப் பட்டு நாட்டின் அரசியலில் சமாதானத்தை ஏற்படுத்த பேச்சு வார்த் தைகள் முன்னேற்றமான பாதை யில் நடைபெற்றன. மக்களின் இயல்பு வாழ்வும் அதற்கான செயல் பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. இடம் பெயர்ந்த மக்களும் சிரமங் கள் மத்தியில் தம்இல்இடங்களில் மீளக் குடியமர்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் உயர்பாது காப்பு வலயத்தைப் பற்றி இன்னும் தீர்க்கமான முடிவுகள் ஏற்படாவிடினும், தலைவர்களில் சமாதானத்தை முன்னெடுக்க வேண்டுமென்ற உறுதி இம்முறுகல நிலைகளை சரி செய்யும் என்ற நம்பிக் கையுண்டு. எனவே இப்புத்தாண்டா னது இனங்கள் மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்தும் ஆண்டாக இருப்பதினால் ஆளும் அரசியல் கட்சி சமாதானத்தை ஒரே இலக்காகக் கொண்டு இத்தனை காலமும் பல்வேறு இன்னல்களை அனுபவித்த மக்கள் மேல் புரிந்துணர்வுடன் செயல்பட அழைக்கின்றோம். மக்களின் துயர்துடைத்து நீதியுடன் கூடிய சமாதான இயல்பு வாழ்வை கொண்டு வர பல தியாகங்கள் மத்தியில் உழைக்கும் விடுதலைப் புலிகளும் தமது இறுக்கமான முடிவுகளை மாற்றி பேச்சு வார்த்தைகளில் 'புரிந்துணர்வும் அரசியலில் ஜனநாயக உரிமைகளைக் காத்தும் பேணும்படி அழைக்கின்றோம். இவ்வாண்டு நம் மக்களுக்கு சிதைந்துபோன தம் வதிவிடங்களையும், வாழ்க்கையையும் கட்டியெழுப்பும் பெரும் பொறுப்பு உள்ளதால், மக்கள் சமூக நலனில் அக்கறையும் அனைவருக்கும் நீதியும், சுபீட்சமும் கிடைக்க தம் கடமைகளை சரிவரச் செய்வது காலத்தின் தேவையாகின்றது. அனைத்து மதத்தைச் சார்ந்தவர்களும் இனங்கள் மத்தியில் பேதங்களை நீக்கி ஒப்புரவையும் மன்னிப்பை யும் உள்ளங்களில் ஏற்படுத்த ஆசிக்கின்றோம். எனவே மலர்ந்த இப்புத்தாண்டு அனைத்து மக் களுக்கும், தமிழ் பேசும் அனை வருக்கும் விடிவைத் தரும் ஆண் டாக இருக்க இறையசீர் வேண்டுகின்றோம்.



**பேரருள் தோமஸ் சவுந்தரநாயகம், யாழ் ஆயர்.**

# புத்தாண்டுச் சிறப்பு மலர் - 2003

யாழ் மக்கள் அனைவருக்கும் மலரும் இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்.

Serendib Express AIR LINE
*Jaffna Special Feel The Differences*

**SERENDIB**
**விமான சேவை**



தலைமையகம்
500, Galle Road,
Wellawatta,
Colombo - 06
Tel : 505632
Fax : 500626

தலைநகர்
67A. Wolfendhal sreet,
Colombo - 13
Tel : 01 - 390128
Fax : 074 - 612656
Hotline : - 0777-517019

யாழ்ப்பாணம்
Serendib
New Market Building,
13, Power House Road,
Jaffna.
Tel : 021-2223916
0777-801038

(C/5554)

காலைக்கதிரவனின் இளங்கதிர்கள் போன்று உதயமாகும் சமாதானத்தின் ஊடாக
எண்ணற்ற எதிர்பார்ப்புகளுடன் புதிய பாதைக்கு ......

இப்புத்தாண்டு உங்களுக்கு ஒளிமயமான – சுபீட்சமான ஆண்டாகப் பூத்துக் குலுங்கட்டும்.

**கொமர்ஷல் வங்கி**

கொமர்ஷல் வங்கி
உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்.

**உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்.**

(5556)

சாந்தியும் சமாதானமும் என்றும் நிலைத்திட எம் அன்புக்குரிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
யாவருக்கும் தித்திக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

கண்களைக் கவர்ந்திழுக்கும் உலகின் முதற்தரமான ஆண், பெண் இருபாலாருக்குமான ரெடிமேட் ஆடைகளின் காட்சிக் கூடம்



**றெஸ் பொயின்ட்**
**DRESS POINT**



23, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(C/5555)

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

**R.B.Booking Centre**

யாழ், கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, கண்டி, பஸ்சேவைகள் யாழ் - கொழும்பு செல்லும் பிரயாணிகளின் வசதி கருதி ஒரே இடத்தில் தரைவழி - வான் வழிக்கான விமானம் - மற்றும் சொகுசுபஸ் - வான் ஆகியவற்றிற்கான ஆசனங்களை முன் கூட்டியே பதிவு செய்வதற்கு நாடுங்கள்.

**ஆர். பி (B) ஆசனப் பதிவகம்**

வைரவர் கோயில் அருகாமை,
நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
0777-737368

15, Grand Bazaar,
Jaffna.
0777-737368

# பிறந்துள்ள புத்தாண்டின் எண் ஆதிக்கமானது எவ்வாறான பலன்களைக் கொடுக்கவுள்ளது?

மக்களின் வாழ்வினை வழி நடத்தும் ஆற்றல்மிக்க சக்திகளுள் எண்கள முதன்மையானவையாகும் ஆதலாற்றான் எம் ஆன்றோர் பலரும் எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் என எண்ணுக்கு முதலிடம் தந்துள்ளனர். ஒன்று முதல் பத்து வரைக்கான எண்கள் எமது வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளுக்கெல்லாம் பெரும பங்கு வகிக்கின்றன. எண்கள் கிரக ஆதிக்கங்கட்குரியனவாக இருந்து மக்களுடைய வாழ்க்கையில் நல்லனவற்றையும் தீயனவற்றையும் அவ்வப்போது மாற்றியமைக்கும் வலிமையுடையனவாக விளங்குவதை எண், சோதிட நூல்கள் பலவும் இதனைக் கற்போர்க்கு நன்கு தெளிவு படுத்தி வருகின்றன.

### நவக்கிரக ஆதிக்கம்

இந்த விதத்திலே ஒவ்வோா எண்ணும் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றினதும் ஆதிக்கத்திற்குள்ளாக விளங்குகின்றன. எண் ஒன்று சூரியனாகவும், இரண்டு சந்திரனாகவும், மூன்று வியாழனாகவும், நான்கு இராகுவாகவும், ஐந்து புதனாகவும், ஆறு சுக்கிரனாகவும், ஏழு கேதுவாகவும், எட்டு சனியாகவும், ஒன்பது செவ்வாயாகவும் நவநாயகர்களின் ஆதிக்கமுடையவர்களாக இருந்து பலாபலன்களைத் தருபவர்களாக திகழ்கின்றனர்.

பிறக்கும் புத்தாண்டாகிய 2003ஆம் ஆண்டும் எண் இரண்டினதும், எண் மூன்றினதும் பலத்தையுடைய, இரண்டினதும் கூட்டுத்தொகையான ஐந்தாம் எண்ணின் ஆதிக்கம் உடைய வருடமாகத் திகழப்போகின்றது.

எனவே எண் சோதிடப்படி இரண்டாம் எண்ணிற்குரிய சந்திரனும், மூன்றாம் எண்ணிற்குரிய வியாழனும், ஆதிக்க நாயகனாகிய புதனுடன் புதிய ஆண்டை வழிநடத்தப் போவது தெரிகின்றது. சந்திரனும், வியாழனாகிய குருவும் சேர்ந்தால் குருசந்திர யோகம் உண்டெனலாம்.

### சமாதானம் மலரும்

சாந்தமும், குளிர்மையும் மிக்க சந்திரனும் தேவகுருவாகிய வியாழ பகவானும் புதுவருடத்தை அமைதியும் சமாதானமும், சாந்தமும் உடைய சுபீட்சமான வருடமாக்குவார்கள் என்பதுடன், கல்வி, புத்திக்குரியவனாகிய புதன் ஆதிக்கநாயகனாவதால் கற்றோர் பெரியோர்களது ஆலோசனைகளும், ஒத்துழைப்பும் நாட்டிற்கு நலம் தரும் என நம்பலாம்.

இந்த இரண்டாம், மூன்றாம், ஐந்தாம் எண்களின் ஆதிக்கமுடையவர்கட்கும் இந்த ஆண்டு நலம் பல நல்கும் நல்லாண்டாக விளங்கும் வாய்ப்புண்டு.

**நீர்வைமணி**

எங்கள் நாடான சிறிலங்கா பதினெட்டு எண்ணின் கீழ் ஒன்று சூரியனாகவும், எட்டுச் சனியாகவும், இரு எண்களின் சேர்க்கையால் ஏற்படும் ஒன்பது எண் செவ்வாய் ஆதிக்க நாயகனாகவும் இருப்ப தால் அரசியலில் மேல் மட்டத்தில் இருப்பவர் களிடையே பிணக்குகளும், படைத்துறையினரிடையேயும் ஆட்சியாளரிடையேயும் கருத்து வேற்றுமைகள், உட்பூசல்களும் ஏற்பட வாய்ப்புண்டெனலாம்.

### பொதுப்பலன்

பொதுவாக நோக்குமிடத்து எண் இரண்டு, மூன்று, ஐந்து எண் ஆதிக்கமுடையோர்க்கு நற்பலன்களையும், ஒன்று, நான்கு, ஏழு எண் ஆதிக்கமுடையோர்க்கு மத்திம பலன்களையும், ஆறு, எட்டு, ஒன்பது எண்காரர்களுக்குப் போராட்டங்களையும் தருவதாகப் புத்தாண்டு காணப்படும்.

ஒவ்வொருவருடைய ஆண்டு, மாதம், திகதிகளின் எண் கூட்டுக்களையும், பெயரெண்ணையும் பொறுத்தே அவரவர் பலாபலன்கள் நன்கு அமைவதுடன், எண்களுடையவும், அவற்றிற்கான கிரகங்களினதும் குணாதிசயங்களையும், அவற்றின் கூட்டுக்களையும் பொறுத்தே பலா பலன்கள் ஏற்படலாகும்.

*******

# இடம் மாற்ற உத்தரவு நடைமுறை

(கொழும்பு)

அரச சேவையாளர் 2003ஆம் ஆண்டிற்கான இடமாற்ற உத்தரவுகள் இன்றில் இருந்து அமுல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்இடமாற்றம் தொடர்பாக ஏற்கனவே பொது நிர்வாக அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், திணைகளங்கள் ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

இதேவேளை, இவ்வாறு இடமாற்றம் பெற்றவர்கள் மேன்முறையீடு செய்ய அவகாசம் வழங்கப்பட்டதுடன், அவ்வாறு மேன்முறையீடு செய்தவர்களின் முறைப்பாடுகளை பரிசீலனை செய்து முடிவுகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)



படம்:பருத்தித்துறை நிருபர்

பருத்தித்துறை தும்பளை இலட்சுமணன் தோட்டம் இடம் பெயர்ந்தோர் முகாமில் தங்கியுள்ளோருக்கு கிறிஸ்மஸ் தினத்தையொட்டி பருத்தித்துறை உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் டி.பிரேமரத்ன, தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் ஹப்புஆராய்ச்சி ஆகியோர் அன்பளிப்புப் பொருட்களை வழங்குகின்றனர்

# பயிற்சி நடவடிக்கையினால் பயணிகளுக்கு இடையூறு

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப்பகுதியில் ஏ-9 வீதிக்கு அண்மையில் இராணுவத்தினர் பயிற்சியில் ஈடுபடுவதால் அவ்வீதியூடாக செல்லும் பயணிகள் பெரும் அசௌகரியங்களிற்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீதிக்கு அண்மையில் பயிற்சியில் ஈடுபடும் போது இராணுவ வீரர்கள் இடையிடையே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்வதாகவும் இதனால் இவ்வீதியால் பயணஞ் செய்வர்கள் பெரும் பீதிக்குள்ளாகுவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன், இவ்வாறான நடவடிக்கைகள் மீண்டும் போரிற்கு படையினர் தயாராகின்றனர் என்ற உணர்வை பயணிகள் மனதில் ஏற்படுத்துவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை இது தொடர்பாக நேற்று முன்தினம் வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இக் கலந்துரையாடலில் ஓமந்தை பகுதியில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பயிற்சியில் ஈடுபடுவதை தவிர்ப்பதாக இராணுவ உயர்அதிகாரிகள் உறுதியளித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (உ-3)


# நேற்று மட்டும் 103 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சவுதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தங்கி இருந்த 28 இலங்கையர்கள் நேற்றுக்காலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

தொழில் வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்காவின் பணிப்பின் பேரில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இவர்களை அழைத்து வந்துள்ளது.

இதேவேளை, லெபனானில் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த 75 இலங்கையர்களும் நேற்று மாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-8)



# பருவகால சீட்டு வழங்கல் நடைமுறையில் மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)

வழமை போன்று ஜனவரி மாதத்துக்கான பருவகாலச் சீட்டுக்கள் தற்போது வழங்கப்படுவதாக யாழ் மத்திய பேருந்து நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பேருந்து பற்றாக்குறை மற்றும் ஆளணிப்பற்றாக்குறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இம்மாதம் தொட்டு பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே பருவகாலச் சீட்டுக்கள் வழங்குவதென முன்னர் தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும், பொது மக்களின் நன்மை கருதி நெருக்கடிகள் மத்தியிலேனும் வழமையான எமது நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் தற்போது அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் உயர்கல்வி மாணவர்கள் ஆகியோருக்கு பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றை இம்மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் தவறாது பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (உ)

# பஸ்களுக்கு ஒரே வர்ணம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்கள் பயணம செய்யும் தனியார் வாகனங்களுக்கும் அரசாங்க பஸ்களுக்கும் ஒரே மாதிரியான வர்ணம் பூசுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (உ-10)

# கடற்படையின் சூட்டுக்கு மீனவர் பலி


(திருகோணமலை)

திருகோணமலை கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர் ஒருவரை கடற்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது மற்றொரு மீனவர் படுகாயம் அடைந்துள்ளார். அவர்கள் மீன்பிடித் தொழிலுக்காக பயன்படுத்திய படகும் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இதனைக் கண்டித்து திருகோணமலை கடற்படை முகாமுக்கு முன்னால திருமலை கடற்தொழிலாளர்கள் நேற்று முன்தினம் இழந்த தொழிலாளியின் சடலத்துடன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அத்துடன், இது தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவிடமும் கடற்படையினரிடமும் முறைப்பாடு செய்துள்ளளர். (உ-8)



படங்கள்:றொபேட்சன்,ஜெயகாந்தன்

பொன்னாலையில் தம்மை மீளக்குடியமர்த்தக் கோரி அப்பகுதி மக்கள் சங்கானை பிரதேச செயலகம் முன்பாக நேற்று முதல் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையை முதலாம், இரண்டாம் படங்களில் காணலாம்.


# தமிழீழ மீட்புநிதிக் கடன்சான்றிதழ் தவறவிட்டோர் கருத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதிக்கடன் சான்றிதழைத் தவறவிட்டோர்;2002ஆம் ஆண்டிற்கான மீட்பு நிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடையாள ஆவணத்துடன் கீழ்க்காணும் நேர அட்டவணைக்கிணங்க வருகை தந்து 2002ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிட்டுத் தமது தெரிவை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப்பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் கேட்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| 02.01.2003(வியாழன்) | | |
| அரசியல்துறைச் செயலகம் | -மானிப்பாய் | காலை-08.00-09.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | -சண்டிலிப்பாய் | மு.ப -10.00-11.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | -சுன்னாகம் | ந.ப -12.00-01.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | -நீர்வேலி | பி.ப 02.00-03.30 மணி |
| 03.01.2003(வெள்ளி) | | |
| அரசியல்துறைச் செயலகம் | -வல்வெட்டித்துறை | காலை- 08.00-09.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | -தம்பசிட்டி | மு.ப 10.00-11.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | -கரவெட்டி | ந.ப 12.30-02.30 மணி |
| 04.01.2003(சனி) | | |
| அரசியல்துறைச் செயலகம் | -கைதடி | காலை- 08.00-09.00 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | -சங்கத்தானை | மு.ப - 10.00-11.30 மணி |
| மங்கையற்கரசி ம.வி | -நல்லூர் | பி.ப - 02.30-04.00 மணி |
| 05.01.2003(ஞாயிறு) | | |
| அரசியல்துறைச் செயலகம் | -வேலணை | காலை- 08.00-09.00 மணி |
| வீரசிங்கம் மண்டபம் | -யாழ்ப்பாணம் | மு.ப்- 11.00-02.00 மணி |



படம்: பருத்தித்துறை நிருபர்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை கிறிஸ்தவ மாணவர் மன்றத்தின் கிறிஸ்மஸ் ஒளிவிழாவையும், பரிசளிப்பு விழாவையும் தென் இந்தியத் திருச்சபைப் போதகர் எஸ்.சதீஸ் அடிகளார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன், கிறிஸ்தவ மாணவமன்றத்தலைவி எஸ்.றெக்சலா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## செல்லரித்து..

அகப்படவில்லை. ஒட்டித் தப்பியிருக்கும் புத்தகங்களும் கெட்டுச் சிதைந்திருக்கும் நிலைமையை தொட்டுப் பார்த்தாலன்றோ தெரியவரும். ஏடெடுக்கும் போது ஓரம் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகிறது.

ஒன்றைப் புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கின்றது. இனி எழுத்துக்களோ என்றால் வாலும் தலையுமின்றி நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது'' இதைவிட பண்டைத் தமிழ் நூல்களை வெளியிட அவர் பட்ட பாட்டினை சொல்வதற்கு வேறு சொற்கள் வேண்டுமா?

இவை அனைத்தையும் நினைவில் வைத்துத் தான் தாமோதரனாரை மதிப்பிடுகின்றபோது முனைவர் அரசேந்திரன் தாமோதரனாருடைய பெருமையை ஆய்வுள்ளத்தோடு இவ்விதம் மொழிகிறார். 'சமயப் பற்று மிகுந்தவரே நம் தாமோதரர் என்றாலும் தமிழின், தமிழரின் தனிப் பெரும் மாண்புகளைச் சமஸ்கிருதம் விரவாத தனித் தமிழ் நூல்களாக பழந்தமிழ் நூல்களே இருந்தபடியால் அவற்றை மீட்டலே தமிழுக்கும் தமிழருக்கும் செய்யும் அடிப்படைப் பணிகளின் முதன்மை என்று கருதியிருக்கின்றார். முனைவரின் இக்கூற்றை வரவேற்று நாமும் வழிமொழி கூறும் நிலையிலிருக்கிறோம்.

### வையாபுரிப்பிள்ளை வாழ்த்து

தமிழ் அறிஞர்களை மதிப்பீடு செய்து அவர்களுக்குஉரிய இடம் வழங்குவதில் தமிழ்ஆய்வாளர் வையாபுரிப்பிள்ளை அவர்களுக்குத் தனிச்சிறப்புண்டு. அவர் தமது 'தமிழ்ச்சுடர் மணிகள்' என்ற நூலில் தாமோதரனார் பற்றி வழங்கியுள்ள மதிப்பீடு அவர் நடுநிலை நின்றே தாமோதரனாரை மதிப்பீடு செய்துள்ளார் என்பதற்கு சான்று கூறுகிறது 'ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவ சமய நூல்கள், குறள், பாரதம் வெளியிடுவதோடு அமைந்துவிட்டார்கள்: வித்துவான் தாண்டவராயன் முதலியார், திவாகரம் முதலிய நூல்களையும் பள்ளி மாணவர்களுக்கு வேண்டும் வசன நூல்களையும் அச்சேற்றுவதில் ஒடுங்கிவிட்டார்கள். மழவை மகாலிங்க ஐயர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்து வேறு சில நூல்களையும் வெளியிட்டு அத்துடன் நின்று விட்டார்கள். களத்தூர் வேதகிரி முதலியார் நாலடி நைடதம் முதலிய நூல்களை வெளியிட்டு அவ்வளவில் திருப்தியுற்றார்கள், திருத்தணிகை விசாகப் பெருமாளையர் முதலியோர் குறளுக்குத் தெளிபொருள், பிரபுலிங்கலீலை, சூடாமணி, நிகண்டு முதலியவற்றைப் பிரசுரித்து அவ்வளவில் தங்கள் முயற்சியைச்சுருக்கிக் கொண்டார்கள். திருவேங்கட முதலியார், இராசகோபாலப் பிள்ளை முதலானவர்கள் இராமாயணம் வெளியிடுவதிலும்நாலடி முதலியன பதிப்பித்தலிலும் ஈடுபட்டு நின்றனர். ஸ்ரீ உ.வே. சாமிநாத ஐயர் அப்போது தான் சீவக சிந்தாமணி பதிப்புமுயற்சியில் போராடிக் கொண்டிருந்தார்கள். ஆகவே நமது பிள்ளை அவர்கள் தன்னந்தனியராய்ப் பண்டைத் தமிழ் செல்வப் புதையலைத்தமிழ் மக்களுக்கு அகழ்ந்தெடுத்து உதவும் பெரும் முயற்சியை மேற்கொண்டார். இவ்விதம் தாமோதரனார் தகைமை பற்றி கூறிய பேராசிரியர் வையாபுரி அவர்கள் மேலும் ஒரு படி சென்று' தாமோதரர் தமிழ் ஆர்வம் அவர் உள்ளத்திலே மங்கள ஒளியாய் திகழ்ந்தது ஒரு காலைக்கொரு கால் வளர்ந்து முடிவில் பேரொளிப் பிழம்பாக சுடர் விட்டெரிந்து என்று எம்

## அரசின் அழைப்பை ஏற்று

# ஜப்பான் வெளியுறவுஅமைச்சர் சிலதினங்களில் இலங்கை வருகை

(கொழும்பு)

ஜப்பானிய வெளியுறவு அமைச்சர்ஸ்ரீமதியொறிக்கோ கவக்குச்சி இலங்கையரசாங்கத்தின் விசேட அழைப்பின் பிரகாரம் ஜனவரி முதல் வாரத்தில் இலங்கைவரவிருக்கின்றார்.

இவரது வருகை நடைபெற்றுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கு ஜப்பானின் இடைவிடாத ஆதரவைக் குறித்துக்காட்டுவதாகும் என்று வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஆண்டின் நடுப்பகுதியில் ஜப்பானில் நடத்தப்படவிருக்கும் உதவிவழங்கும் நாடுகளின் மகாநாடு பற்றிய பூர்வாங்க ஏற்பாடுகள் பற்றி அரசாங்க உயர்பீடத்தினருடன் ஸ்ரீமதி கவக்குச்சி உரையாடல்களை நடத்துவார்.

அத்துடன், 2003 மார்ச் மாதத்தில் நடத்தப்படவுள்ள சமாதானப் பேச்சுக்களின் ஆறாவது சுற்றுப்பற்றிய ஏற்பாடுகள்பற்றியும் அவர் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவார் இது ஜப்பான்தலைநகர் ரோக்கியோவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஜனவரி 8-10 ஆம் திகதி வரையான இவ் இலங்கைவிஜயத்தின்போது இவர் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர், வெளியுறவு அமைச்சர் ஆகியோரை சந்திப்பார்.

ஜப்பானிய அரசாங்கம் அடுத்தஆண்டுவடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கென விசேட நிவாரணத் தொகையொன்றையும் வழங்கவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு ஒருவிசேட பிரதிநிதியும் ஜப்பானினால் நியமிக்கப்பட்டமை இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கு அதுகொடுக்கும் முக்கியத்துவத்தைக் காட்டுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

### நிர்வாகிகள் தெரிவு

(திருநெல்வேலி)

பொன்னாலை ஸ்ரீகண்ணன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 21 ஆம் திகதி கடற்றொழிலில் சங்கத்தலைவர் பி.வேலையா தலைமையில் நடைபெற்றது.

பெ.ஜெயராசாவின் தலைமையில் 15 பேர் கொண்ட புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. (உ-43)

### பொலிஸை

அத்துடன் இன்னும் மூன்று மாதங்களுக்குள் அரசாங்கம் மாறவிருப்பதால், மாறியவுடன் அந்த பொலிஸ்நிலையத்தைசேர்ந்தவர்களை எல்லாரையும்தான் விரட்டிவிடப் போவதாகவும் சூரியாராச்சி தெரிவித்திருப்பதாக பொலிசார் தெரிவித்தனர். (த)

தாமோதரனார் புகழை உச்ச நிலையில் வைத்து உவந்து போற்றுகிறார். நம் பண்டித மணி கணபதிப்பிள்ளை அவர்களும் இத் துறையில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்தினை ஏற்றிய நிலையிற் போலும் 'பாழ்பட்டுக் கிடந்த பண்டைய தமிழ் ஏட்டுச் சுவடிகளுக்கு எப்படியும் உயிர் கொடுக்க தாமோதரனார் ஆற்றிய பணி தலையாய பணி' என்று ஓரிடத்திற் குறிப்பிட்டுள்ளார்.

சி. வை. தாமோதரனார் 01 01.1901 இல் சென்னையில் மறைந்தபோது தனக்கு வழிகாட்டியாக விளங்கிய தண்டமிழ் தாமோதரனாருடைய சிறப்பை,

'தொல்காப் பியமுதலாந்
தொன்னூல் களைப்பதிப்
பித்து
ஒல்காப்புகழ்மேவி யுயர்ந்த
பண்பின் - அல்காத்
தா மோ த ரச் செல்வன்
சட்டகநீத் திட்டதுன்பை
யாமோ தரமியம்ப வே'

என்று சாமிநாத ஐயர்பாடியுள்ளார். 'பண்பில அல்காத் தாமோதரர்' என்று குறிப்பிட்டிருப்பது தமிழ் உள்ளவரையில் தாமோதரனார் புகழை நாமும் நம் வழித்தோன்றல்களும் ஏற்றிப் போற்றுவது ஏற்புடைத்து என்பதை எடுத்துரைக்கின்றது அன்றோ? ■

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சங்கானை, வெல்வில்இலுப்பைத்தாள் முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேகம் பூசைகளுடன் திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது. (உ)

### பதிவு

(கல்வியங்காடு)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் 2002 2003 கல்வி ஆண்டுசிறுவணிக முகாமைத்துவகற்கைநெறிக்கு விண்ணப்பிப்பவர்களை பதிவு செய்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## பாதுகாப்பு வலய பிணக்கு

# அரசு முடிவுகட்டத் தவறினால் சமாதான முயற்சி பாதிப்புறும்

### எச்சரிக்கிறார் மன்னார் ஆயர்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வுகாண வேண்டும், இல்லாது போனால் தற்போதைய சமாதான முயற்சிகளில் பாரிய பாதிப்பு ஏற்படுவது தவிர்க்கமுடியாதது.

என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் கவலையுடன் எச்சரித்துள்ளார்:

அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்வதற்கு யாழ். குடாநாட்டு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா விதித்த நிபந்தனைகளையடுத்து அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது தொடர்பில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக தற்போது எழுந்துள்ள இக் கட்டான நிலையைப் போக்குவதற்கு அரசு தான் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம)

### வாகன விபத்தில் மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பளை இயக்கச்சிப்பகுதியில் மோட்டார் சைக்கிளும் பஸ்ஸும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற மூவருபேர் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சோரன்பற்றைச் சேர்ந்த வன்னியசிங்கம் கேதா (வயது-21), பலாலி தெற்கைச் சேர்ந்த பரமசிங்கம் சுப்பையா(வயது-45)மிருசுவில் கெற்பெலியைச்சேர்ந்த செல்லையா மகேந்திரன்(வயது-26) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (த-7)

## சிகிச்சை நிலையங்களுக்கு தொற்று நீக்கி கருவிகள்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இயங்கும் சிகிச்சை நிலையங்களுக்கு, தொற்று நீக்கும் மின்சார உபகரணங்கள் மற்றும் தொற்று நீக்கும்கருவிகள் என்பனவற்றை சுகாதார சேவைகள் திணைக்களம் வழங்கி வருகின்றது.

இந்த நவீன உபகரணங்களை யுனிசெவ் அன்பளிப்புச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவை இம் மாதம் முதல் பயன்படுத்தப்படவுள்ளன'' (உ-252)

## ஆசிரியர்களுக்கு ஜப்பானில் கணனிப் பயிற்சி

(கொழும்பு)

15 பேர் கொண்ட ஆசிரியர் குழு கணனிப் பயிற்சி பெறுவதன் பொருட்டு இம் மாதம் 18 ஆம் திகதி ஜப்பான் செல்லவுள்ளனர்.

ஜிகா எனப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள ஜப்பான் தென் ஆசியா நட்புறவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இப்பதினைந்து பேரும் கணனிப் பயிற்சி பெறவுள்ளனர்.

இதேவேளை கல்வி மனித வள அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட இந்த 15 பேரிலும் ஒவ்வோர் தமிழ் முஸ்லிக்களும் 13 பெரும்பான்மையினத்தவர்களும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

### இணையத்திற்கு புதிய தலைவர்

(தென்மராட்சி)

யாழ். மாவட்டஅரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் புதியதலைவராக வைத்தியக் கலாநிதி வி. தியாகராஜா இன்று முதல் பதவி வகிக்கவுள்ளார். (உ-77)

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் ஹக்கீம்மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில், முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள அனைவரையும் ஒன்று திரளுமாறு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் ரவூப்ஹக்கீம் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பொத்துவிலில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ் அழைப்பினை விடுத்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் மக்களுக்கு விமோசனம்கிடைக்க வேண்டுமானால், ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவேண்டும்.

இவ்விடயத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளுடன் நேர்மையாகப் பேச்சுவார்த்தை நடத்தி, சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையோடு, முஸ்லிம் மக்கள் வாழுகின்ற பிரதேசத்தில் தம்மைத்தாமே ஆளுகின்ற சுயாட்சியை வடிவமைக்கும் உரிமையை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இவ் எதிர்பார்ப்பு நிறைவேறாவிட்டால் கட்சியின் தலைமைப்பதவியை முஸ்லிம் மக்களுக்காக தூக்கி எறியவும் தயார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரதேசம் தமிழர்களுக்கு மட்டும் உரியது அன்று, முஸ்லிம் மக்களினதும் தாயகம் என்பதை தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார். (உ-8)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
குறள்

# வலம்புரி

## புத்தாண்டே வருக

**2003ம்** ஆண்டின் பிறப்பு இன்று. இன்பமும் துன்பமும் கலந்த உலக வாழ்வில் 2002ம் ஆண்டு இன்னல்களும் இடையிடையேஇன்பமான தகவல் களும்தந்து விடைபெற்றுள்ளது.

இலங்கையைப்பொறுத்தவரை விடைபெற்றுச் செல்கின்ற 2002ம்ஆண்டின்பதிவுகள் வரலாற்று முக்கிய மானவை. இரு வேறுபட்ட கட்சிகளின் தலைவர்கள் ஆட்சிஅதிகாரத்தில் அமர்ந்ததும், விடுதலைப் புலிகளுடன் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டதும் 2002இல்என்பதை மறந்துவிட முடியாது.

இருபது வருடகால யுத்தத்தின் பாதையில் ஓர் சமாதானக்கீற்றை இந்தமண்ணில் பரப்பிய 2002ம் ஆண்டின் விலகலும், 2003ம் ஆண்டின் வருகையும் மக்களின் மனங்களில் புதிய உணர்வையும், சமாதானப் பற்றுதலையும்ஏற்படுத்த வேண்டுமென்பது பலரினதும் விருப்பமாகும்.

யாழ்ப்பாணத்தில் இருபதுவருட இடைவெளிகுப்பின் மீண்டும் சீன வெடிகளின் சத்தங்கள். 2003ம் ஆண்டின் வருகைக்கு கட்டியம் கூறுகிறது. இளைஞர்கள், சிறுவர்கள் எனப்பலரும் சீன வெடிகொளுத்தி மகிழ்வதில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்கும் போது கடந்தகாலங்களில் இலங்கையில் தமிழ்மக்கள்சீன வெடிகொளுத்தி தம் மகிழ்வைப் பகிர்ந்து கொள்வதற்குக்கூட உரிமைஇருக்கவில்லை என்ற உண்மை புலப்படுகிறது.

வெடிச்சத்தமென்றால் அது, துப்பாக்கிதான் என்ற நிலையிலிருந்து தமிழ்ப்பிரதேசங்கள் மீட்சி பெற்றுவருவது ஓர் நிறைவைத்தரினும். யுத்தத்தால் தம் உறவுகளை, உடைமைகளை, அங்கங்களை இழந்து குடிசைகளுக்குள்ளிருந்து மௌனமாக முகாரி இசைக்கின்ற உள்ளங்களுக்கு ஏதேர்வொரு ஆறுதலைப் பிறக்கின்ற புதுவருடம் வழங்கவேண்டும். சதாமனம் நொந்து ஏதோ இந்தமண்ணில் பிறந்து விட்டோமென்ற உணர்வில் துன்பக்கடலில் மூழ்கியிருக்கும் நாம் உடன்பிறப்புகளுக்கு உதவிக்கரம்நீட்டி, ஏழ்மை போக்கி, நல்லதோர் வாழ்வைநோக்கி அழைத்துச்செல்வோம். புத்தாண்டில் இந்தப்புதுமுடிவை எல்லோரும் எடுப்போம்.

# செல்லரித்த தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பித்துப்

# புது வாழ்வளித்த தண்டமிழ்த் தாமோதரனார்

இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை 102 வது நினைவு தினம் இன்று.

**மா. க. ஈழவேந்தன்**

செல்லரித்து சீரழிய இருந்த செந்தமிழ்ச் சுவடிகளுக்கு வாழ்வு கொடுத்தவர்கள பலர், அவர்களுள் மூவர் எம் நினைவில் நிற்கின்றனர். இதனைத் தமிழ்த் தென்றல் திரு. வி. க தனது 'வாழ்க்கைக் குறிப்புகள்' என்ற நூலில் 'பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்கு கால் கொண்டவர் ஆறுமுகநாவலர், சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை, கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் சுவாமிநாத ஐயர்' என்று தமிழ் அறிஞர்கள ஆற்றிய பணியினை அழகுற எடுத்துரைக்கின்றார்.

### பரிதிமாற் கலைஞரின் இரங்கற் பாடல்

தமிழக அறிஞர்கள் மறைந்த போது ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் எடுத்தியம்பிய இரங்கல் உரைகள் நிறைய உள்ளன. ஆனால் ஈழத்து அறிஞர்கள் மறைந்தபோது அதே துடிப்புடன் தம் துயரைத் தெரிவித்த தமிழக அறிஞர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. எனினும் புறநடையாக - தாமோதரனார் மறைந்த போது அவரின் அளவிடற்கரிய பெருமையைப் புகழ்படைத்த பரிதிமாற்கலைஞர் உள்ளம் உருகும் பாடலாக பாடியுள்ளார்.

'காமோதி வண்டுதேன்
கடிமலர் கூட்டுதல்போல்
தாமோது செந்தமிழின்
நன்னூல் பதிப்பித்த
தாமோதரம்பிள்ளைச் சால்
பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார்'

வேறு சொற்களில் விளம்பின் தாமோதரனாரின் தரம் உணர்ந்தவர்கள் தான் அவரின் பெருமையை எடுத்துரைக்க முடியும் என்பது இப்பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### சிறுப்பிட்டி தந்த செந்தமிழ்ச் செம்மல்

தமிழ் ஈழத்தின் ஓர் அங்கமாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் தலைநகரமே நல்லூரில் 05. 12. 1822 ல் ஆறுமுகநவலர் பிறக்க, 10 ஆண்டுகள் கழித்து சிறுப்பிட்டி என்னும் சிற்றூரில் 12. 09. 1832 ல் வைரவநாதன் பெருந்தேவி ஆகியோருக்கு தாமோதரனார் தலை மகனாகப் பிறந்தார். தந்தை ஆசிரியராக இருந்ததனால் தந்தையின் அறிவு இவரின் வளர்ச்சிக்குத் துணை நின்றது; அத்தோடு இவரின் மேல்நிலைக் கல்வி மேம்பட சுன்னாகத்து முத்துக்குமார நாவலர் தூண்டுகோலாக விளங்கினார். தமிழ்க்கல்வியில் ஊன்றிக் கவனம் செலுத்திய இவர் 1844-1852 வரையான காலப்பகுதியின் தெல்லிப்பழை மிஷன் பாடசாலை, வட்டுக்கோட்டை கல்வி நிலையம் ஆகிய வற்றில் பயின்றதோடு யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கிலத்தில் ஆழமான அறிவைப் பெற்றார்.

### சென்னை மாநிலக் கல்லூரி

தனது இருபதாம் அகவையில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியராக விளங்கிய இவர் 1856 இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் நடத்திய 'தினவர்த்தமானி' இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவரிசென்னை வாழ்வு 1856இல் இல் தொடங்க 1857 இல் சென்னை மாநிலக் கல்லூரியில் தமது ஆசிரியப் பொறுப்பை ஏற்றார். இம்மாநிலக் கல்லூரியில் தான் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயரும் சில காலம் ஆசிரியப் பணி புரிந்ததைஇங்குநினைவு கொள்வோமாக. இக்கல்லூரியின் முன்றலில் உ.வே. சாமிநாதஐயரின் சிலை கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இச்சென்னை மாநிலக் கல்லூரியில் இலங்கை அரசியல் அரை நூற்றாண்டு அரசோச்சியசேர் பொன்.இராமநாதன் பயின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் அமைதி காண மிக நெருக்கடியான காலகட்டத்தின் பெரும் பணி ஆற்றிய ஜி பார்த்த சாரதி இங்கேயே பயின்றார். இவருடன் பயின்றவர் இலங்கையின் கல்வித்துறை இயக்குனராகவிளங்கிய திருமதி. இரத்தினா நவரத்தினம், திருமதி. இரத்தினா நவரத்தினம் திருவாசகத்துக்கு 'அழகிய ஆங்கில உரை வழங்கியதோடு, யோகர் சுவாமிகள் பற்றிய ஆங்கில நூலும் வரைந்துள்ளார்.

### தமிழகத்தில் தாமோதரனாரின் பல்துறைப்பணி

தமிழீழத்தில் தோன்றிய தாமோதரனார், தமிழகம் சென்று மாநிலக் கல்லூரியிற் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தின், முதல் இளங்கலை (B A) பட்டதாரியானார். தாமோதரனாருடைய நிழற்படம் சென்னை பல்கலைக் கழகத்து நூலகத்தில்தனிச்சிறப்புடன் பேணிக்காக்கப்படுகிறது. அவரது நினைவுக்கூட்டங்களின்போது இவ்வோவியத்திற்கு மலர் மாலை சூட்டி சிறப்புச் செய்யப்படுகிறது சென்னை மாநிலக் கல்லூரியில் இருந்து கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரிக்கு மாற்றம் பெற்றுச் சென்ற இவர்(தனது 39 ஆவது அகவையில்) 1871 இல் இளங்கலைச் சட்டம் (B L) பட்டம்பெற்றார். 1882 இல் அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றார். பின்பு 1884இல், சட்டத்துறையில் இவர் பெற்றிருந்த சிறப்புக் காரணமாக புதுக்கோட்டை அரசின் முறைமன்ற நடுவராக பணியாற்றும்படிஇவருக்கு அழைப்புக் கிடைத்தது. 1890இல் இப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற இவருக்கு 1895இல் இராவ் பகதூர்பட்டம் வழங்கப்பட்டது தமிழீழத்தில் தோன்றியஇவர் தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் உள்ள புரசைவாக்கம் என்ற பகுதியில் தனது அறுபத்தொன்பதாவது அகவையின் தொடக்கத்தில் 1901ம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் இறையருளில் இரண்டறக்கலந்தார்.

### அரசேந்திரன் மொழிந்தவை

சி.வை. தாமோதரனார் ஆற்றிய பணிகள்பல. ஆனால் அவருக்கு அழியாப் புகழைத் தந்து நிற்பது அவர் பதிப்பித்த நூல்களாகும்' ".தமிழீழம் தந்த தாமோதரனார்'' என்ற தலைப்பில் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்த்துறைப்பேராசிரியராக விளங்கும் முனைவர் (டாக்டர்) கு. அரசேந்திரன், தாமோதரனார் பதிப்பித்த நூல்களை ஆண்டடிப்படையில் தந்திருப்பது அவரின் ஆய்வுள்ளத்திறகு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

| | | |
|---|---|---|
| 1) | நீதிநெறி விளக்கம் | 1854 |
| 2) | தொல் சேனா வரையம் | 1868 |
| 3) | வீரசோழியம் பெருந்தேவனார் உரையுடன் | 1881 |
| 4) | இறையனார் களவியல் | 1883 |
| 5) | தணிகைப் புராணம் | 1883 |
| 6) | தொல் பொருள். நச் | 1885 |
| 7) | கலித்தொகை | 1887 |
| 8) | இலக்கண விளக்கம் | 1889 |
| 9) | சூளாமணி | 1889 |
| 10) | தொல்- எழுத்து | 1891 |
| 11) | தொல்- சொல் (நச்) | 1892 |

மேற் குறித்தவற்றை வெளியிட்ட தாமோதரனார் 1898 இல் அகநானூற்றை வெளியிட எடுத்த முயற்சியும் அவர் வரலாற்றிலிருந்து அறியத்தக்கதாக இருக்கிறது. சொற்பிறப்பு ஆய்வாளர் முனைவர் கு. அரசேந்திரன் கூற்றுப்படி ''பதினொரு நூல்களில் மகாலிங்க ஐயர் பதிப்புத் தவிர பிற அனைத்தும் அவரால் மட்டுமே முதன்முதலாக அச்சேற்றப்பட்டன என்பதை நாம் நினைக்க வேண்டும்'' என்று வலியுறுத்திச் செல்லும் கூற்று தாமோதரனாரின் தலைசிறந்த பதிப்புப் பணிக்குச் சான்று பகர்கிறது;

### தன் பணி பற்றித் தாமோதரனார்

தன் வாழ்நாள் முழுவதையுமே பதிப்புத் துறைக்குஅர்ப்பணித்த தாமோதரனார்,

'நல்ல தமிழ் நூல்களுக்கு வந்த விதியையும் கையெழுத்துப்பிரதிகளுக்கு வந்த கதியையும் அவை அடைந்திருக்கும் ஸ்திதியையும்பார்த்துச் சகிக்க மாட்டாமை ஒன்றே என்னை இத்தொழிலில் வலிப்பது'

'பல பெரும்வித்துவான்கள் இந்நூலை (தொல்காப்பியத்தை) அச்சிடவிரும்பியதும் முயன்றதும் இரண்டொரு பிரதிகள் தேடிப் பார்வையிட்டதும் தமக்கு நிகழ்ந்தசந்தேகங்களான இதனை அச்சிடின்தம் பெயர்க்குக் குறைவு நேரிடுமென்று தம் முயற்சியைக் கைவிட்டதும் அடியேன்பூரணமாக அறிவேன். ஆதலால் பண்டிதர், கவிராஜபண்டிதர், மகாவித்துவான், புலவர் என்றின்ன பெரும்பட்டசுமையைத் தலைமேலேற்றிக் கொள்ளாது இன்னும் பலகாலந்தமிழ்படித்தற்கு உரிமை பூண்டு நிற்கும் என் போலியரே இதில் கையிடுவதுே ரவசியமாயிற்று' என்று மொழிந்துள்ளார்.

### கற்றோர் ஏற்றும் கலித்தொகை

தாமோதரனார் பதிப்பித்த பலநூல்களில் அவருக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்தது அவரின் 'கற்றோர்ஏற்றுங்கலித்தொகை'ப் பதிப்பேயாகும் அவரின் 59 ஆவது அகவையில் 1887 இல் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது. தனது அகவை 22இல் 1854 இல் நீதிநெறி விளக்கத்தை தனது முதல் நூலாக வெளியிட்டவரும் இவரே. கலித்தொகைச்சுவடியைதான் பதிப்பிக்க முனைந்தபோது தனக்கு ஏற்பட்ட தொல்லைகளை நெஞ்சம்நெகிழ கலித்தொகைப்பிரதிகள் தேடயான் பெற்ற கட்டம் வாயினாற் கூறும் அளவைத்தன்று. முதன் முதல் யான்பார்த்ததுபுதுவை நயனப்ப முதலியாரது மூல பாடப்பிரதி அது தலையுங் கடையுமின்றிய குறைப் பிரதி மேலும் பெரும்பாலும் எழுத்துக்கள் சிதைந்துஒருபாட்டின் சேருறுப்பாவது முற்றும் வாசிக்க முடியாமற் கிடந்ததாற் படிப்பதற்கே வெறுப்புண்டாய் நீக்கி விட்டேன்.

'பின்வர்த்தொல்காப்பியப் பரிசோதனைக்காக தேடிய போது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது பிரதிஅகப்பட்டது. அது கொண்டு கலித்தொகை அருமை உணர்ந்து அது எப்படியும் உலகிற்குப் பயன்பட வேண்டும் என்னும் அவாவுற்றுபலஆதீனங்களுக்கு விண்ணப்பம் செய்தபோது தனக்குத்திருவ வடுதுறைஆதீனம் துணை நின்றது' என்று கூறி ஆறுதலடைகிறார்.

### செல்லரித்த நூல்கள்சிதறுண்டு கிடந்ததைகண்டு கலங்கியவர்

'என் சிறுபிராயத்தில்எனது தந்தையார் எனக்குக்கற்பித்த நூல்கள் இப்போது தமிழ் நாடெங்கும் தேடியும்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)


**தினசரி தியானம்**

**உண்மையில் உனக்குத் தெய்வம் வேண்டுமா?**

எவன் ஒருவன் தெய்வதரிசனத்திற்காக ஏங்குகின்றானோ, அவன்தான் அன்பை வளர்க்க முடியும்; அவனிடம் மட்டும்தான் கடவுள் தன்னைக்காட்டிக் கொள்வார், தேவை, கிடைத்தல் என்ற பிரச்சினை தான் கடவுள்; உண்மையிலேயே அவருடையதேவை இருந்தால் உடனே அவர்கிடைப்பார்.

பிரகலாதன், ராதை, வால்மீகி, துகாராம், துளசிதாஸ், மீரா இவர்களைப்போல் கடவுள்தேவையை ஏற்படுத்திக்கொள்; கடவுள் தரிசனம் அந்த நிமிஷமே கிடைக்கும்;

-சுவாமி சிவானந்தர்

### பிரதமரிடம்...

அதேவேளை ஜனாதிபதி, பிரதமர் ரணிலுக்கு அனுப்பி வைத்துள்ள விளக்கம் கோரும் கடிதத்தில் நாளை 2ம் திகதிக்குள் விளக்கம் அளிக்கப்பட வேண்டுமெனவும் அது தொடர்பாக சில நடவடிக்கைகள் தான் மேற்கொள்ளவுள்ள தாகவும் தெரிவித்துள்ளார். (ம)

### வவுனியாத் திருடர் இருவர்...

பிடித்தனர்.

திருடர்களில் ஒருவர் அண்மையில் நல்லூர்ப் பகுதியில் விதவைப் பெண்ணொருவரைத் திருமணம் செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அதேவேளை வவுனியாவில் நீண்ட காலமாக இடம் பெற்றுவரும் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களுக்கும் பிரஸ்தாப நபர்களுக்கும் இடையே தொடர்பிருப்பதாக கூறப்படுகின்றது. பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருடப்பட்ட நகைகள் திருடர்களினால் யாழ்ப்பாணத்தி லுள்ள நகைக்கடைகளில் விற்பனை செய்யப்பட்டதை பொலிசார் நேற்று உறுதிப்படுத்தினர்.

(த.7)

### கல்வியியல்கல்லூரிகளில் 3500 பயிலுநர் ஆசிரியர்கள அனுமதி

(கொழும்பு)

நாட்டில் உள்ள கல்வியியல் கல்லூரிகளில் உள்ள 3500 பயிலுநர் ஆசிரியர்கள் அடுத்த வருடம் முதல் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் வயதெல்லை இம்முறை 25 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இக் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் அனுமதி ஜனவரி மாத நடுப் பகுதியில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

---

### கொட்டடி மீன்சந்தை பண்ணைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் இயங்கி வரும் மீன் சந்தை இன்று முதல் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள பழைய மீன் சந்தைப் பகுதிக்கு மாற்றப்படவுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த மீன்சந்தைக் கட்டடத் தொகுதியை யாழ் மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையன் இன்று நண்பகல் திறந்து வைப்பார். இதேவேளை அரியாலை தபால் கட்டைச் சந்தியிலுள்ள புனரமைக்கப்பட்ட பொதுச்சந்தையும் இன்று பி.ப 2 மணிக்கு திறந்து வைக்கப்படும். (த -7)

அமைதிச் சூழலில் புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இனிதான நல்வாழ்த்துக்கள்

மணப்பெண் அலங்காரம் உள்ளிட்ட சகல அழகுக் கலை சேவைகளுக்கும், அழகுக்கலை வகுப்புக்களுக்கும், சகல மனையியல் வகுப்புக்களுக்கும்

YOGI BEAUTY PARLOUR HOME SCIENCE ACADEMY

யாழ் நகரில் பலவருடங்களாக அழகுக்கலை நிபுணரும், மனையியல் ஆசிரியையுமான

MRS. YOGINI SHANMUGANATHAN

Dip in. COSMETOLOGY, BEAUTY THERAPY HAIR DRESSING AND HOME SCIENCE.

(INDIA, COLOMBO)

75, அம்மன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(6402) T.P - 2222796

எம்முடன் இணைவோர் உயர் கல்வி பெறுவோர்

விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A/L 2005

கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 05.01.2003 8 a.m.

Acc. - திரு. பாலவாசன்
Eco. - திரு.விக்கி
Com. - திரு.நந்தீஸ் (பிரிவு I), திரு.யசோ (பிரிவு II)
Log. - திரு.சயந்தன்
Tam. - திரு. குழந்தை (பிரிவு I), திரு. லிங்கம் (பிரிவு II)
H/C - திரு. பத்மராஜா
Geo. - திரு. பாபு
Hin. - திரு. N.T.தரன்
Hist. - திரு. சுதன்
P/Sci. - திரு.ஸ்ரீரங்கன்
Drama. - திரு.மதி
Chri. - திரு. வசந்தன்

❋ 2002 O/L எடுத்த எமது பழைய மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
❋ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

மலரும் புத்தாண்டில் அனைவருக்கும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள்

இதோ மீண்டும் யாழ். மண்ணில்..

எமது நம்பிக்கை நாணயம் மிகுந்த சேவை...!

EQUIP UNIT TRUST



◆ தொழில் நுட்ப வல்லுநர்களின் கைவண்ணத்தில் உருவான உயர்தர உருக்குத் தளபாடங்கள் எமது ஸ்தாபனத்தில் உருவாக்கப்பட்டு விற்பனையாகின்றன
◆ வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப அவர்கள் தரும் உரு அமைப்பின்படி (DESIGN) குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
◆ பாடசாலைகள், கல்வி, கல்விசார் நிறுவனங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்

எமது உற்பத்திப் பொருட்கள்

- STEEL CUPBOARDS
- VARIETIES of TABLES
- BOOK SHELVES
- STEEL CABINET (for office use)
- COMPUTER TABLE (Wood & Steel)
- FILE RACKS
- CASH BOX

Reliable Services & Repairs of

⌘ Type Writers ⌘ Roneo Machines ⌘ Roneo Printings
⌘ Computer stencil cuttings

Above services are done by us

E.U.T
No.249, K.K.S. Road, Jaffna.
T.P.0777 168128
(Opposite Jaffna Hindu College)

THE ROYAL COLLEGE OF JAFFNA

புதுவருட வாழ்த்துக்கள
புதிய வகுப்புக்கள் ஆரம்பம
426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை.
(6401)

ராஜா
யாழ்ப்பாணம்
இன்று முதல் குதூகல ஆரம்பம
முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
சுந்தரா ரவல்ஸ்
10.30, 2.30, 6.30
ரசிகர்களுக்கு எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
(C/5524)

அனைவருக்கும் எம் புத்தாண்டு வாழ்த்துக்கள்
குமரன் தொலைத் தொடர்பகம்
27, சப்பல்வீதி, யாழ்ப்பாணம்
T.P :- 021-222-5469
புத்தாண்டு தினமான இன்று உள்வரும் தொலைத்தொடர்புகள் இலவசமாக வழங்கப்படும்
(C/5558)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுப்பொலிவுடன் மலரும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வன்னியிலும் பெற்றுக் கொள்ளலாம்

கீஸ்ட் உணவுத் தயாரிப்பாளர்கள்

அதிஉன்னத தரம், சுவை நீண்டகால தன்மை அடிப்படையில் இயற்கைப் பழங்களில் இருந்து தயாரிக்கப்படுகிறது.
உங்கள் வசதித் தன்மைக்கேற்ப நியாய விலையில், வேறுபட்ட நிறைகளில் பிளாஸ்ரிக் கப்களிலும், போத்தல்களிலும் எங்கும் கிடைக்கின்றது

எமது தயாரிப்புக்களானவை
❋ ஸ்ரோபரி ஜாம் ❋ விளாம்பழ ஜாம் ❋ அன்னாசி ஜாம் ❋ பழக்கலவை ஜாம் ❋ அன்னாசி கோடியல்
❋ பசன்புருட் கோடியல் ❋ மிக்ஸ்புருட் கோடியல்

ஆரோக்கிய வாழ்வின் இயற்கைச் சுவை KIISST

உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவோர்:
KIISST FOOD MANUFACTURES. 55, OLD PARK ROAD, JAFFNA. SRILANKA.
பதிவு இல:- J/DS/PR687. யாழ்மண்ணின் உன்னத தயாரிப்பு KIISST



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.